Vijey விஜய
# விஜய்
19.06.2013 - மலர் 10, இதழ் 16




ISSN 1391-9504

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உதவி கோரிய முதலியர்கள்

மூற்று முழுதான ஆங்கிலேய நிர்வாகம் வன்னியில் பரந்திருந்தாலும், பண்டாரவன்னியன் அவர்களை வன்னியை விட்டுத் துரத்தியடிக்க கங்கணம் கட்டியிருந்தான். ஆங்கிலேயர்களின் நடவடிக்கைகளை கண்காணித்து தனக்கு அறிவிக்கப் பலரை அவன் வேவு பார்க்க வன்னிக்குள் அனுப்பியிருந்தான். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் பரியாரிவேலன் என்பவன் ஆங்கிலேயர்களால் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான். அவன்மீது கிளர்ச்சியை உருவாக்க முயற்சித்தவன் என்று குற்றம் சாட்டப்பட்டது. சில நாட்களின் பின் அவன் சிறையிலிருந்து எப்படியோ தப்பித்துவிட்டான். அவன் தப்பிச் சென்றமை ஆங்கிலேயர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. இவ்வளவு கட்டுப்பாடுகள், காவல்கள் நிறைந்திருந்த சிறையில் இருந்து எவ்வாறு அவன் தப்பினான் என்பது அவர்களால் கண்டுபிடிக்க முடியாத புதிராகவே இருந்தது.

பண்டாரவன்னியனை ஆங்கிலேய ஒற்றர்கள் வன்னியெங்கும் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்தார்கள். அவன் வன்னிக்குள் இரவுவேளைகளில் வந்து செல்கிறான் என்ற செய்தி ஆங்கிலேயர்களின் காதுக்கு எட்டியது. இரவு நேரம் எல்லைக்காவல் பலப்படுத்தப்பட்டது. இருந்தாலும், ஆங்கிலேயப் படைப்பிரிவினர் அவனுக்கு அஞ்சியே செயற்பட்டனர். பண்டாரவன்னியன் நடமாட்டத்தை எல்லைப்புற ஆங்கிலேயப் படைகள் நன்கு அறிந்திருந்தபோதும் அதனை மேலிடத்திற்குத் தெரியப்படுத்தாமல் இருந்தனர்.
பண்டாரவன்னியனால் தமக்கு ஆபத்தேதும் ஏற்படக்கூடாது என்பதே அவர்களின் அச்சமும் நோக்கமுமாக இருந்தது.
பண்டாரவன்னியன் என்றாலே ஆங்கிலேயப் படைகளுக்குப் பெரும் அச்சமும் நடுக்கமும் ஏற்பட்டுவிடும்.
இவற்றையெல்லாம் மேல்பற்றுக்குப் பொறுப்பாக இருந்த முதலியார் கவனித்துக்கொண்டிருந்தார். அவருக்கு ஆங்கிலேய நிர்வாகம் வழங்கும் சலுகைகள் ஏராளம்.
பண்டாரவன்னியனை அந்த முதலிக்குப் பிடிக்கவில்லை. அத்துடன், பண்டாரவன்னியன் மீண்டும் வன்னி மண்ணின் ஆட்சியைக் கைப்பற்றினால் வன்னி முழுவதும் அவன் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். தான் நினைத்ததைச் சாதிக்க முடியாது என்ற எண்ணம் அவன் மனதில் நிலையானது. இதனால், அவன் கதிர்காமநாயகமுதலி, மற்றும் தமக்கு இசைவான வன்னியின் முதலிமார்களுடன் நட்புக்கொண்டிருந்தான். அனைத்து முதலிமாரும் பண்டாரவன்னியன் வன்னிக்கு மீண்டும் வருவதை விரும்பவில்லை. அதனால், அவர்கள் அனைவரும் ஆங்கிலேய நிர்வாகத்திற்கு வன்னியிலும், வன்னி எல்லைப்புறத்திலும் நடக்கும் நிகழ்வுகளை ஒன்றுவிடாமல் ஆங்கிலேயருக்கு தெரியப்படுத்திக் கொண்டே இருந்தார்கள்.

கண்டித் திசாவையும், பதவியா (பத்தனி), தாமரைவெவ (தாமரைக்குளம்) வன்னிமாரும் குஞ்சிக்குளம் என்னும் பகுதியில் ஒன்றுகூடி பண்டாரவன்னியனைச் சந்தித்து முல்லைத்தீவுக் கோட்டையை மீளவும் தாக்குதல் நடத்திப் பிடித்து ஆட்சியைப் பலப்படுத்துமாறு கோரினர். இச்செய்தியானது, கதிர்காமநாயக்க முதலியாரால் ஆங்கிலேய கோட்டை தலைமை நிர்வாகத்திற்கு கடிதமூலம் தெரிவிக்கப்பட்டது. இதுதவிர, இதே மாதிரியான கடிதம் செட்டிக்குளம் கோணப்ப முதலியாராலும் அனுப்பப்பட்டது. அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது, முல்லைத்தீவுக் கோட்டை எந்தநேரமும் பண்டாரவன்னியனால் தாக்கி அழிக்கப்படலாம். தங்கள் சிறையிலிருந்து தப்பிய பரியாரிவேலன் பண்டாரவன்னியனின் பணிப்பின் பேரில் மாறுவேடத்தில் வன்னிக்குள் ஊடுருவியுள்ளான். ஆங்கிலேய நிர்வாகத்திற்கும் விசுவாசமாக இருக்கும் எமக்கு மட்டுமல்லாது; தங்களுக்கும் இதனால் பேராபத்து ஏற்படும். பண்டாரவன்னியன் நினைத்ததைச் சாதிக்கும் வீரன். எனவே, நீங்கள் அக்கறைகொண்டு உரிய பாதுகாப்பை எமது பகுதிக்கும் விஸ்தரிக்குமாறு வேண்டுகிறேன் என அக்கடிதத்தில் குறிப்பிட்டு எழுதப்பட்டிருந்தது.

(தொடரும்)



# தெரிந்து கொள்வோம்

* மிகவும் குறைந்த அலகினை அளவிடப் பயன்படுத்தப்படும் கருவியின் பெயர் என்ன?
  வேர்னியர் (Vernier)



* அணு உலைகளில் எரிபொருளாகப் பயன்படுத்தப்படும் கனிமம் எது?
  I. யுரேனியம்
  II. ப்ளுடோனியம்



* பிலிம்சோல் கோடு (Plimsoll Line) என்றால் எதனைக் குறிக்கின்றது?
  கடலில் கப்பல் பிரயாணம் செய்யும்போது, பிரதேசத்திற்கேற்ப கப்பல் ஆபத்தின்றிப் பயணிக்கக் கூடிய நிறையின் அளவைக் காட்டும் கப்பலின் வெளிப்புறத்திலுள்ள அளவீட்டைக் குறிக்கின்றது.





* இணையத்தளத்தைப் பயன்படுத்துவோர் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?
  Netizen என அழைக்கப்படுகின்றனர்.

* 'விக்கிலீக்ஸ்' இணையத்தளத்தின் ஸ்தாபகர் ஜூலியன் அசேஞ்ச் இங்கிலாந்தில் உள்ள வெளிநாட்டு தூதரகமொன்றில் அடைக்கலம் புகுந்துள்ளார். அவர் பிறந்த நாடு எது?
  அவுஸ்திரேலியா



* ஓசோன் படை சிதைவடையக் காரணமான வாயு எது?
  க்ளோரோ ப்ளோரோ காபன் (CFC)

* மனித உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அழிக்கும் தன்மைவாய்ந்த கிருமியைக் கொண்ட நோய் 'எய்ட்ஸ்' (AIDS) ஆகும். இந்த நோய் எப்போது? யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
  1983 இல் பிரான்ஸ் நாட்டவரான பேராசிரியர் லுக் மண்டக்னா மற்றும் ஐக்கிய அமெரிக்க பேராசிரியரான ரொபர்ட் கோலோ ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டது






* இலங்கையில் பல்வேறு வகையான நினைவுதின முத்திரைகள் வெளியிடப்படுகின்றன. அந்த வகையில் நினைவுதின முத்திரையை முதலில் வெளியிட்ட நாடு எது?
  பேரு


தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk



ஐன்ஸ்டைன் மரணித்து சில மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட அவரது மூளையின் இடது, வலது புறத் தோற்றங்கள்




# ஐன்ஸ்டைனின் மூளை அசாதாரணமானதா?

அல்பர்ட் ஐன்ஸ்டைன், அசாதாரணமான புத்திசாலியாக எவ்வாறு விளங்கினார்? என்பது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் அவ்வப்போது நிலவி வந்தன. இந்நிலையில், அவரது புத்திசாலித்தனத்திற்குக் காரணம், மற்றவர்களின் மூளையில் இல்லாத-அவரின் மூளையில் மட்டுமே உள்ள பிரத்தியேகமான இயல்புகள்தான் என்று மருத்துவ விஞ்ஞானத்தின் புதிய ஆய்வுகளினூடாக தெரியவந்துள்ளது. இது குறித்த ஆய்வில் ஈடுபட்ட சில ஆய்வாளர்கள், ஐன்ஸ்டைனின் மூளையுடன் மேலும் 85 மனித மூளைகளை ஒப்பிட்டுப் பார்த்ததன் பின்பே, இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

''ஏனையவர்களின் மூளைகளுடன் ஒப்பிடும்போது, ஐன்ஸ்டைனின் மூளையின் அளவிலும் எடையிலும் எந்தவொரு வேறுபாடும் இல்லாத போதிலும் மூளையின் உட்பகுதிகளில் உள்ள கலங்கள், வளைவுகள், சுருக்கங்கள் உட்பட, இதர மூளைசார் இந்திரியங்களில் வேறுபாடுகள் உள்ளதாக பேராசிரியர் டீன் ஃபோள்க், சயன்ஸ் டேலி இணையத்தளத்திற்கு அளித்த தகவலில் தெரிவித்திருந்தார். இவர், அமெரிக்காவின் ஃப்ளோரிடா மாநிலத்தின் ஹேல் ஜி.ஸ்மித் ஆய்வு நிறுவனத்தில் மானிடவியல் பேராசிரியையாக பணியாற்றி வருகின்றார்.

ஐன்ஸ்டைனிடம் இனங்காணப்பட்ட இந்த தனிப்பட்ட இயல்பு நிலையானது, அவரின் நரம்புத் தொகுதியில் அதிக ஊட்டத்தை அளித்து, கணித ஆற்றலை பெருக்கியிருக்கும் என்று பேராசிரியை டீன் ஃபோள்க் தெரிவித்துள்ளார். ஐன்ஸ்டைனின் அசாதாரண மூளை தொடர்பிலான 14 புகைப்படங்களை வைத்து ஆய்வுகளை மேற்கொண்டதோடு, அவரின் முழு மூளையினதும் செயற்பாடுகளை ஆய்வு செய்ததை அடுத்தே, பேராசிரியையும் அவரது உதவியாளர்கள் குழுவும் அது தொடர்பில் விளக்கமளித்துள்ளனர். இந்த ஆய்வு முடிவுகள் 'அல்பர்ட் ஐன்ஸ்டைனின் மூளை செயற்பாடுகள்: பகிரங்கப்படுத்தப் படாத புகைப்படங்கள் அடிப்படையிலான தெளிவுபடுத்தல்கள்' என்ற தலைப்பில் கடந்த நவம்பர் 16 ஆம் திகதி 'Brain' என்ற நரம்பியல் தொடர்பிலான சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருந்தன.



1955 இல் ஐன்ஸ்டைன் மரணித்து சுமார் ஏழு மணித்தியாலங்கள் கடந்த பின்பு, பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் அவரது பிரேதப் பரிசோதனை இடம்பெற்றது. அப்போது ஐன்ஸ்டைனின் குடும்பத்தாரின் அனுமதியுடன் அவரது மூளை அகற்றி எடுக்கப்பட்டது. இந்தப் பணியை உடற்கூற்றியல் நிபுணரான வைத்தியர் தோமஸ் ஸ்டோல்ட்ஸ் ஹார்வே மேற்கொண்டார். இதன்போது, ஐன்ஸ்டைனின் மூளை பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு புகைப்படங்கள் எடுக்கப்பட்டதோடு, மூளைக் கலங்கள் வெளிப்படையாக தென்படும் வகையில் வைக்கப்பட்டன. இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் வைத்தியர் ஹார்வேயினால் ஆவணப்படுத்தப்பட்டிருந்தன. எனினும், இந்த புகைப்படங்கள், ஆய்வுகள், ஆவணப்படுத்தப்பட்ட மூளையின் பகுதிகள் என்பன நீண்டகாலத்திற்கு பொதுமக்கள் பார்வைக்குட்படுத்தப்படாமல் அமெரிக்காவின் பென்சில்வேனியாவின் தேசிய சுகாதார மற்றும் மருத்துவத் துறை அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன.

பிரியா

## வாசகர் முகம்



இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்கள்
கு.உதர்ஷன் - கு.ஸஷ்மிதா,
திருகோணமலை.




கல்முனை பிரதேசத்தில் நீண்டகாலமாக 'விஜய்' பத்திரிகை உட்பட, ஏராளமான பத்திரிகைகளின் விற்பனை முகவர் நிலையமாக செயற்பட்டு வருகின்ற 'கல்முனை ஹனிபா ஹோட்டல்' புதுப்பொலிவுடன் புதிய இடத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளது. கடந்த வாரம் வாடிக்கையாளர்கள், வாசகர்கள் சூழ பத்திரிகை விற்பனை முகவர் ஏ.எம்.ஹனிபாவினால் புதிய விற்பனை முகவர் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

(படம்: இஸ்ஹாக், கல்முனை)

DIPLOMA IN ENGLISH விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
கிலாஸ் போகாமலே ஆங்கிலம் படிக்கலாம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு
முழுப்பெயர் முகவரியைக் குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 3 மூன்று
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் (Watch) ஒன்று./மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ். என்பன வழங்கப்படும்.
மேலதிக விபரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1600/- மாத்திரம் அறவிடப்படும். வேறு கட்டணம் இல்லை.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கறுப்புப் பெட்டி!

## அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....




பன்-பாலா

இதுவரை....

ஒளித்திரையில் அப்பாவி ரோஜரின் உடல் அவயவங்களை பகுதி பகுதியாகப் பிரித்துப் போட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்த மூவரும் அதிர்ச்சியில் வாயடைத்துப் போய் நின்றார்கள்.

இனி....

தன்னை மறந்து 'ஓ' வென அலறினான் சுதன்.

"ரொபோ ரோஜரின் உடல் பாகங்களை கழற்றி விட்டது.அதனை நாங்கள் பத்திரப்படுத்தி வேறு ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுத்துவோம்" என்று மிகச் சாதாரணமாகவே கூறினார் இராமபுத்திரன்.

"இராமபுத்திரன்மீது திடீரென ஒரு வெறுப்பும் அருவருப்பும் தோன்றியது, அவர்கள் மூவருக்கும்.

"பாவம் ரோஜர்" என்று பெருமூச்செறிந்தான் பிரியன்.

"இது அவனுக்கு வழங்கப்பட்ட தண்டனை" என்று தாழ்ந்த குரலில் கூறினார் இராமபுத்திரன்.

"ஏன்" என்று சற்றுக் காரக்குரலில் கேட்டான் சுதன்.

"உங்களுக்குப் பிழையான ஆலோசனைகளைத் தந்தது அவன்தானே! அவன் கூறியபடிதானே நீங்கள் ஆய்வுகூடத்தினுள் நுழைந்தீர்கள்" என்று கடுகடுப்புடன் கூறினார் இராமபுத்திரன். இங்கே ஏடாகூடமாக ஏதாவது பண்ண நினைத்தால், ரோஜருக்கு ஏற்பட்ட கதிதான் உங்களுக்கும். நான் திரும்பி வரும்வரை இங்கேயே நீங்கள் இருக்கவேண்டும் புரிந்ததா?" என்று கூறிவிட்டு குள்ள விஞ்ஞானிகள் இருக்கும் கட்டடத்துக்குள் நுழைந்தார் இராமபுத்திரன்.

"அஷ்வின் இப்போது என்ன செய்வது?" என்று சுதன் கேட்டான்.

"அந்த இராமபுத்திரன் சொன்னமாதிரி இங்கே சும்மா உட்கார்ந்திருக்க முடியாது. இப்போது நாங்கள் தப்பவேண்டும். அதற்கு ஏதாவது பண்ணியாக வேண்டும்" என்று கவலையுடன் கூறினான் அஷ்வின்.

மூவரும் மெதுவாக அடுத்த அறையொன்றினுள் நுழைந்தார்கள். அங்கு எந்தத் திசையில் பார்த்தாலும் கருவிகள் கருவிகள் என நிறைந்திருந்தன. அங்கு பதுங்கியிருந்த கமெரா ஒன்று அவர்களது பிரவேசத்தினை அப்படியே அரங்கேற்றிக்கொண்டிருந்தது. இதன் நேரடி ஒளியூட்டு விஞ்ஞானிகளின் பார்வைக்கு படும் என்பதையோ, இவர்களது நடமாட்டங்கள் அனைத்தும் பதிவாகும் என்பதையோ அச்சிறுவர்கள் அப்போது சிந்திக்கும் நிலையில் இருக்கவில்லை.

ஒரு கணினியிலிருந்து ஒரு ஒளிக் காட்சி நேரடியாக வருவது கண்டு சுதனையும் பிரியனையும் அருகே அழைத்தான் அஷ்வின். இவர்களும் கணினியைச் சூழ்ந்து கொண்டார்கள். அந்த ஒளித்திரையில் பதினொரு பேர் கொண்ட அந்தக் குள்ள விஞ்ஞானிகள் குழு தெரிந்தது. ஏதோ முக்கிய கலந்துரையாடலில் அவர்கள் ஈடுபட்டிருந்தது புலனானது.

இவர்கள்தான் அந்த பதினொரு அரக்கர்களும்" என்றான் அஷ்வின்.

"ஒருவனிடம் ஒரு கறுப்புப் பெட்டி இருக்கிறதே" என்பதைக் கண்டுபிடித்தான் பிரியன்.

"அந்தக் கறுப்புப் பெட்டிக்குள்தான் இந்த செயற்கை உலகின் மர்மம் இருக்கிறதோ தெரியவில்லை" என்பது சுதனின் சந்தேகம். ஒரு திடீர் மௌனத்துக்குள் மூழ்கிப்போய் மூவரும் நிசப்தமானார்கள்.

பின்னர் ஒருவரையொருவர் ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டார்கள்.

இனி தங்களது பெற்றோர்களைக் காணும் சந்தர்ப்பம் கிடைக்காமலே போய்விடுமோ என்ற எண்ணம் எழுந்து ஒட்டு மொத்தமாக அவர்களை கலவரப்படுத்தியது.

"அஷ்வின், நீ இந்தக் கணினியில் ஏதாவது கண்டுபிடிக்க முடியுமா என்று பார். எங்களுக்கு எது நடந்தாலும் பரவாயில்லை. நடப்பது நடக்கட்டும்" என்று சுதன் சொன்னதும், அதை ஆமோதிப்பது போல அஷ்வினும் பிரியனும் தலையை ஆட்டினார்கள். அஷ்வின் உற்சாகத்துடன் கணினியைப் பார்த்தான். கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டே கணினியில் கட்டளைக் கருவியின் ஒரு விசையை அழுத்தினான். அடுத்த நிமிடம்.... (தொடரும்)

# பூரணசந்திரன்



விஸ்வாதேஷ் நாட்டு மன்னர் சோகம் தாங்கிய முகத்துடன் அமர்ந்திருந்தார்.

"மந்திரியாரே, நான் வருந்துவதற்குக் காரணமான துன்பத்தை இப்போதே ராணியிடம் கூற வேண்டும்" என்றார் மன்னர். அதற்குள் ராணி அங்கே வருகை தந்து, மன்னர் இருக்கும் நிலையைப் பார்த்து, "அரசே, தங்களுக்கு என்ன ஆயிற்று?" என்று கேட்டார்.

"தேவி உனக்கு விஷயம் தெரியாதா? பூரணசந்திரன் இறந்து விட்டாராம். மந்திரிதான் இத் தகவலை என்னிடம் கூறினார்" என்றார். மன்னரின் துயரமான குரலைக் கேட்ட ராணி, "ஆ! பூரணசந்திரன் இறந்துவிட்டாரா?" என்று கூறித் துக்கம் தாளாமல் கண்ணீர் வடித்தாள். பணிப்பெண்கள் சுற்றி நின்று மகாராணியை ஆறுதல்படுத்திவிட்டு, "ஏன் இந்தத் துக்கம்?" என்று கேட்டனர்.

"பெண்களே, பூரணசந்திரன் இறந்துவிட்டாராம்!" என்று அழுகையினூடே சொன்னாள் ராணி. இதைக்கேட்ட பணிப்பெண்கள் ராணியைச் சுற்றி நின்று கோவென்று கதறி அழுதனர். அனைவரும் துக்கத்தில் இருக்கும்போது, அந்த அரண்மனையில் புதிதாக வேலைக்குச் சேர்ந்த பணிப்பெண் ஒருத்தி அங்கே வந்தாள். சூழ்ந்திருப்போர் அனைவரும் துக்கமாக, இருப்பதைக்கண்ட அவள் திடுக்கிட்டாள்.

"என்ன விஷயம்?" என்று இதர பணிப்பெண்களிடம் விசாரித்தாள். பூரணசந்திரன் இறந்துவிட்டார்! அதுதான் எல்லோரும் அழுகின்றனர்" என்று அவர்கள் கூறினர். புதிய பணிப்பெண் நன்றாகக் குழம்பிப் போனாள்.

"பூரணசந்திரனா? யார் அவர்? எனக்குத் தெரியவில்லையே!" என்று தன் சந்தேகத்தைக் கிளப்பினாள்.

"உனக்கு பூரணசந்திரனை உண்மையிலேயே தெரியாதா? மகாராணி, இந்தப் பேதைப் பெண்ணுக்குப் பூரணசந்திரன் யார் என்பதை நீங்களே தெரிவியுங்கள்!" என்றனர். ராணி விழித்தாள். பின் தன்னருகே இருந்த அரசரைப் பார்த்து, "இவளுக்குப் பூரணசந்திரன் யாரென்றுகூடத் தெரியவில்லை. எனக்கு இருக்கும் சோகத்தில் அதை விளக்கமாகவும் சொல்லத் தெரியவில்லை. நீங்களே அதனைச் சொல்லி விடுங்கள்!" என்றார் மரியாதையுடன். மன்னர் ஒரு நிமிடம் யோசித்தார்.

பின்னர் மந்திரியைப் பார்த்து,"மந்திரியாரே, இந்த அப்பாவிப் பெண்ணுக்குப் பூரணசந்திரன் யாரென்று நீங்களே சொல்லிவிடுங்கள்!" என்றார் சீற்றத்துடன்.

மந்திரி தயங்கியபடியே "அரசே, பூரணசந்திரன் யார் என்பது உங்களுக்குத்தானே தெரியும். நீங்கள்தான் அதைச் சொல்லவேண்டும்" என்றார். மன்னர் யோசித்தார். மந்திரியின் காதருகே குனிந்து, "இந்த பூரணசந்திரனைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது. விஷயம் அறிந்த மந்திரியாகிய நீங்களே என்னிடம் வந்து கூறியதால், அதுபற்றி உங்களுக்குத்தான் தெரியும் என்று நான் அமைதியாக இருந்துவிட்டேன். ஆகவே, நீங்களே சொல்வதுதான் சரி. எனக்குப் பூரணசந்திரனைப் பற்றித் தெரியாது!" என்றார் மன்னர். மந்திரி திடுக்கிட்டார்.

"இந்தச் செய்தியைத் தங்களிடம் சொன்னது யார்?" என்று திரும்பவும் கேட்டார் மன்னர். "நம்முடைய சேனாதிபதிதான் இன்று காலையில் இச் செய்தியைக் கூறினார். அவர் அதனைச் சொல்லும்போது அவர் முகம் சோகமாக இருந்தது" என்றார்.

"உடனே அவரை அழைத்து பூரணசந்திரனைப் பற்றி விசாரியுங்கள்" என்று உத்தரவிட்டார் மன்னர். சில நிமிடங்களில் சேனாதிபதி, அரசர் முன் நிறுத்தப்பட்டார்.

"பூரணசந்திரன் யார் என்று எனக்குத் தெரியாது. நம்முடைய உபதளபதிதான் இதை என்னிடம் கூறினார்!" என்றார்.

அப்படியா? என்ற அரசர் உபதளபதியை அழைத்துவர ஆணையிட்டார். உபதளபதியும் வந்தார்."அரசே, எனக்குப் பூரணசந்திரனைத் தெரியாது. எங்கள் வீட்டுக்கு வந்து அழுக்குத் துணிகளை எடுத்துச் செல்லும் சலவைக்காரன்தான் என்னிடம் இத்தகவலைச் சொன்னான்" என்றார். கோபமடைந்த அரசர், சலவைக்காரனை அழைத்துவர ஆணையிட்டார். சலவைக்காரனும் வந்து நின்றான்.

"அரசே, பூரணசந்திரனைப்பற்றி எனக்கும் தெரியாது. எனது அக்காவின் மகள் பொன்னிதான் இன்று அதிகாலை என்னிடம் இத்தகவலைச் கூறிவிட்டு அழுதுகொண்டே ஓடினாள்!" என்றான். இதனால், மன்னர் பெரிதும் கோபமடைந்தார். அதற்குள் பொன்னியை அரசாங்க வீரர்கள் அழைத்து வந்தனர்.

"பூரணசந்திரன் யார் என்று நீ சொல்லாவிட்டால், இப்போது உன் தலை மண்ணில் உருளும்!" என்று கடுமையாக எச்சரித்தார் மன்னர்.

பொன்னி தலை கவிழ்ந்தவாறு, "என்னுடன் அழுக்கு மூட்டைகளை ஆற்றுவரை எடுத்து வந்து, சலவை செய்தவுடன் வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்க்கும் என் வளர்ப்புக் கழுதைதான் பூரணசந்திரன் என்றாள்.

"ச்சே....!' என்றபடி வெட்கத்துடனும், விரக்தியுடனும் தலை குனிந்தார் மன்னர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில்

# பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள்

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெரு மற்றும் தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் கடந்த ஏப்ரல் 6 ஆம் திகதி ஆரம்பமாகி, ஜூலை 8 ஆம் திகதி வரையிலும் நடைபெற்று வருகின்றன.

நான்கு கட்டங்களாக நடைபெறுகின்ற பெரு விளையாட்டு நிகழ்வுகளின் முதல் கட்டப் போட்டிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏப்ரல் 6 ஆம் திகதியும் இரண்டாம் கட்டப் போட்டிகள் ஜூன் 1 ஆம் திகதி முதல் ஜூன் 10 ஆம் திகதி வரை யாழ்ப்பாண மாவட்டத்திலும் நடைபெற்றுள்ளதுடன் மூன்றாம் கட்டப் போட்டிகள் ஜூன் 13 ஆம் திகதி ஆரம்பமாகி 26 ஆம் திகதி வரை வவுனியா மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன. நான்காம் கட்டப் போட்டிகள் ஜூன் 27 ஆம் திகதி ஆரம்பமாகி ஜூன் 29 ஆம் திகதி வரை மீண்டும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் நடைபெறவுள்ளன.

தடகளப் போட்டிகள் ஜூலை மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்திலும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கு.சுரேன்

## யாழ். மாவட்ட மகளிர் அணி செம்பியன்



வட மாகாண மாவட்டங்களின் ஹொக்கி அணிகளுக்கிடையிலான ஹொக்கி சுற்றுப்போட்டி சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றபோது, பெண்களுக்கான



இறுதிப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட அணியினை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணி ஒரு கோல் பெற்று 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணி முழுமையான ஆதிக்கம் செலுத்தி, மேலும் 3 கோல்களை அடுத்தடுத்து அடித்து, வவுனியா மாவட்ட அணிக்கு அதிர்ச்சியளித்தது.

இறுதியில் யாழ்ப்பாண மாவட்ட அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வட மாகாண செம்பியனாகியது.

## ஆடவர்/மகளிர் ஹொக்கிப் போட்டிகள்:

## உடுவில் மகளிர் கல்லூரி அணி செம்பியன்





பெண்களுக்கான ஹொக்கி இறுதிப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணியினை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது. போட்டியின் முதல் பாதியாட்டத்தில் உடுவில் அணி ஒரு கோல் பெற்று முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் உடுவில் அணி மேலும் ஒரு கோல் பெற்று தமது வெற்றியினை உறுதிசெய்துகொண்டது. இறுதியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினை எதிர்த்து தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி மோதியது. இரு அணிகளும் சமபலத்துடன் மோதி, அடுத்தடுத்து கோல்களைப் போட்டு ஆட்டத்தில் சுவாரஸ்யத்தினை ஏற்படுத்திவந்தன. எனினும், இறுதி நேரத்தில் ஆட்டத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி, 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் செம்பியனாகியது. மூன்றாமிடத்தினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

## மேசைப்பந்தாட்டத்தில்

## வவு/சுந்தரபுரம் ஜி.ரி.எம்.எஸ். 2 பதக்கங்களை வென்றது



வோசோ யூனியர் தேசிய மேசைப்பந்தாட்டப் போட்டி அம்புஸ சிங்க றெஜிமேட் மேசைப்பந்தாட்ட உள்ளக அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் வவுனியா சுந்தரபுரம் ஜி.ரி.எம்.எஸ். வீரர்களான பொன்னுத்துரை சசிதரன் வெள்ளிப் பதக்கத்தையும் அஹஸ்ரன் றொக்ஸன் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

வவுனியா சுந்தரபுரம் ஜி.ரி.எம்.எஸ்.பாடசாலையில் 150 இற்கும் குறைவான மாணவர்களே கல்வி கற்று வரும் நிலையில், இம்முறை வட மாகாண மட்ட மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 15 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்கள் அணிகள் செம்பியனாகியதுடன், 19 வயதுப்பிரிவு பெண்கள் அணி இரண்டாமிடம் பெற்று ஆதிக்கம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமேசன் மழைக்கா


வனாந்தரங்கள், தாவரங்கள் பற்றி பேசும்போது, இயற்கை வனப்பும் உயிர்ப்பல்வகைமைத் தன்மையும் கொண்ட அமேசன் மழைக்காட்டினை தவிர்க்கவே முடியாது. 'உலகின் விசாலமான வெப்பமண்டல மழைக்காடு' என இது அறியப்படுகின்றது. அத்துடன், உலகின் நீளமான நதிகளில் ஒன்றாகிய அமேசன் நதியும் இதனை ஊடறுத்துப் பாய்கின்றது. இவற்றுடன் மேலும் பல சிறப்புக்களை தன்வசம் வைத்திருக்கும் அமேசன் மழைக்காட்டின் விபரங்கள் குறித்து இவ்வாரம் அறிந்துகொள்வோம்.



## தாவர பல்வகைமை

அமேசன் மழைக்காட்டின் ஒவ்வொரு 3.47 ஏக்கரிலும் 1,500 தாவர இனங்களும் 750 மர வகைகளும் 900 தொன் உயிரித் தாவரங்களும் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்ற 438,000 தாவர இனங்களும் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.





## விலங்குகள் பல்வகைமை

ஓணான் வகையை சேராத 300 வகை ஊர்வனங்கள், 175 வகை ஓணான்கள், 500 வகை பாலூட்டி இனங்கள் இங்கு வசிக்கின்றன. அதேபோன்று, 1,294 பறவை இனங்கள், 428 ஈருடகவாழிகள், 300 நன்னீர் மீன் இனங்கள் என்பன அமேசன் மழைக்காட்டுப் பகுதியில் உள்ளன. அத்துடன், 30 மில்லியன் பூச்சி இனங்களின் வாசஸ்தலமாகவும் அமேசன் மழைக்காடு திகழ்கின்றது.

## வெப்பநிலை

இந்த வனாந்தரத்தில் பசுமைத் தன்மை அதிகமாகவே காணப்படுகின்றது. இங்கு பகல்பொழுதில் நிலவும் வெப்பநிலைக்கும் இரவுப் பொழுதில் நிலவும் வெப்ப நிலைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன. இந்த வனாந்தரத்தின் வெப்பநிலை சாதாரணமாக 79 பாகை ஃபரன்ஹைட் ஆகும்.



## அமேசன் நதி பெருக்கெடுத்தல்

ஜூன் முதல் ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் அந்தீஸ் மலைத்தொடரின் பனித்தட்டுக் கரைவதனால், அமேசன் நதியின் நீர் மட்டம் 30 அடி முதல் 45 அடி வரை உயரும். இதனால், அமேசன் நதி பெருக்கெடுத்து ஓடும்.



## அமேசன் நதி

அந்தீஸ் பனித்தட்டுக் கரைவதனால், அமேசன் நதியின் நீர்மட்டம் அதிகரிக்கின்றது. உலகின் நதி நீர் கொள்ளளவில் 16 சதவீதம் இந்த அமேசன் நதியிலேயே உள்ளது. ஒவ்வொரு நிமிடமும் 28 பில்லியன் பீப்பாய் நீர் அமேசன் நதியில் இருந்து அட்லாண்டிக் சமுத்திரத்தில் கலக்கின்றது. இங்குள்ள கிளை நதிகளின் எண்ணிக்கை 1,100 ஆகும். அமேசன் நதி நீரால் 2,722,000 சதுர மைல் பரப்பளவுள்ள பிரதேசம் வளப்படுத்தப்படுகின்றது.



## பரவல்

'அமேசன் படுகை' எனப்படும் சுமார் 7 மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள பகுதியில், அமேசன் மழைக்காடானது, 5.5 மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்பளவுவரை பரந்துள்ளது. பிரேஸிலின் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதி உட்பட, மேலும் எட்டு தென் அமெரிக்க நாடுகளிலும் இது பரவியுள்ளது. அமேசன் மழைக்காட்டினை ஒரு நாடாக எடுத்துக்கொண்டால், அதனை உலகின் 9 ஆவது பெரிய நாடாகக் கருத முடியும்.

## காட்டு நிலம்

அமேசன் காட்டின் தரைப்பகுதிக்கு 2 சதவீதம் அளவு சூரிய ஒளியே கிடைக்கின்றது. அத்துடன், காட்டு நிலமானது, இறந்த விலங்குகள் மற்றும் தாவரங்களின் எச்சங்கள் மற்றும் கழிவுகளினால் நிரம்பியுள்ளது. இவை அப்பகுதிகளில் நிலவும் வெப்பநிலை மற்றும் ஈரலிப்புக் காரணமாக விரைவில் உக்கிவிடுகின்றன.




## விசேட சூழற்தொகுதி

அமேசன் மழைக்காட்டுப் பகுதியிலுள்ள பச்சைத் தாவரங்கள் மற்றும் விலங்குகளே அங்கு நிலவும் விசேட சூழற்தொகுதிக்கு காரணமாக உள்ளன. அங்குள்ள விலங்குகளின் வாழ்க்கையானது, பச்சைத் தாவரங்களின் இருப்பிலும் பச்சைத் தாவரங்களின் வாழ்க்கையானது, விலங்குகளின் இருப்பிலுமே தங்கியுள்ளது.

## நாடுகள்

இந்த மழைக்காடானது ஒன்பது நாடுகளில் பரவியுள்ளது. பிரேஸில், ஈக்வடோர், பொலிவியா, சூரினாம், பிரெஞ்ச் கயானா, வெனிசுவெலா, பெரு மற்றும் கொலம்பியா ஆகியவையே அந்த நாடுகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்டின் விபரங்களை அறிவோம்!





## காடழிப்பு

உலகம் முழுவதும் உள்ள மழைக் காடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளின்படி; ஒவ்வொரு நிமிடமும் அமேசன் மழைக்காட்டின் 150 ஏக்கர் நிலப்பகுதி காட்டுத் தீயினால் நாசமடைகின்றது. அதேபோன்று, விலங்குகள், தாவரங்கள், பூச்சி இனங்கள் 130 வரையில் நாளாந்தம் உயிரிழக்கின்றன என்று தெரியவந்துள்ளது.

## ஒட்சிசன்


பூமியில் உள்ள ஒட்சிசனின் அளவில் 20 சதவீதமானவை அமேசன் காடுகளில் உற்பத்தியாகின்றது.

## அதிகபட்ச மழை

அமேசன் வனாந்தரத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் 1,750 மி.மீற்றர்-2,000 மி.மீற்றர் வரை மழைவீழ்ச்சி கிடைக்கின்றது.



## அமேசன் வனாந்தரத்தின் உணவுச் சங்கிலி






## பழங்குடிகள்

சுமார் இரண்டு லட்சம் பழங்குடி மக்கள் அமேசன் காட்டுப் பகுதியில் வசிக்கின்றனர்.

## ஔடதங்களின் இருப்பிடம்

இங்குள்ள தாவரங்களில் 25 சதவீதமானவை மருத்துவக் குணமிக்க தாவரங்களாகும்.

## அமேசானிய மண்

மேற்புற மண்ணில் 99 சதவீதம் வளமான மண்ணாகவே உள்ளது. அந்த மண்ணில் நீரை உறிஞ்சக்கூடிய தன்மையும் காணப்படுகின்றது. இதனால், வளமான பகுதிகள் துரிதகதியில் மண்ணால் உறிஞ்சப்படுகின்றன. அடர்த்தியாக வளர்ந்த மரங்களின் காரணமாக, இந்த வளமான மண் கழுவப்படாமல் பாதுகாப்பாக உள்ளது.

## நான்கு அடுக்குகள்

இக்காடு நான்கு வகையான அடுக்குகளைக் கொண்டது.

1. மேல் அடுக்கு: இங்கு 200 அடி உயரம் வரையான மரங்கள் காணப்படும். மரத்தின் அகலம் 16 அடி அளவில் இருக்கும். இப்பகுதி கழுகுகள், குரங்குகள், வெளவால்கள், பட்டுப் பூச்சிகள் போன்ற உயிரினங்களின் வாழ்விடமாக உள்ளது.

2. சுவர் அடுக்கு: சுவர்போல் அடர்த்தியான மரங்களைக் கொண்டிருக்கும். இலைகள் மிகச் சிறியதாக அடர்த்தியாக இருக்கும். ஏராளமான சிறு உயிரினங்கள் இங்கு வாழும். ஸ்லொத், பாம்பு, பல்லி, ஓணான், மரத்தவளை என்பன பிரதானமாக வசிக்கும்.

3. கீழ் அடுக்கு: லேசான சூரியஒளி கிடைக்கும் அளவிற்கு குறுந்தாவரங்கள் நிறைந்திருக்கும். நீள இலைகள்,அடர்த்தியற்ற நெடிய தண்டுடன் கூடிய தாவரங்கள் காணப்படும். சிறுத்தை, சிவப்புக் கண் தவளை, வண்டினங்கள், பூச்சிகள் என்பன இங்கு வாழும்.

4. தரை அடுக்கு: மிக அடர்ந்த பகுதியான இது பெரும்பாலும் இருட்டாகவே இருக்கும். சூரிய ஒளி மிகவும் குறைவாகவே கிடைக்கும். பாசி, புதர்கள் போன்ற தாவரங்களைக் காணலாம்.

கவிதா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வினாத்தாள் - I

பெயர்: ..................................................


★ முதல் மூன்று வினாக்களுக்கும் பொருத்தமற்ற உருவின்கீழ்க் கீறிடுக.

01) 1. 2. 3. 4.




02) 1. M 2. V 3. R 4. W

03) 1. 2. 3. 4.




★ பின்வரும் ஒவ்வொரு வரிசையிலும் உள்ள உருக்களில் ஒரு உரு வேறுபட்டுள்ளது அதன்கீழ்க் கீறிடுக.


04) 1. 2. 3. 4.



05) 1. 2. 3. 4.



06) அடுத்து வரவேண்டிய சரியான வடிவம்



1. 2. 3. 4.

07) 8 4 6 இடைவெளிகளில் வரவேண்டிய இலக்கம் யாது?

0 — 3
9 — 9

1. 4 / 6  2. 6 / 0  3. 6 / 1  4. 7 / 1

08) இக்கோலத்தைப் பாருங்கள்

345 → 455 → 565 → [ ]

இக்கோலத்திற்கேற்ப வெற்றுக் கூட்டுக்குள் வரவேண்டிய எண் யாது?

1. 655  2. 675  3. 665  4. 545

★ கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களையும் எழுத்துக்களையும் கொண்டு பின்வரும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

5, 5, 3, 2, K, 2, T, N, S, 3, T, S, 7, 2, T, 5, 0, R

09) அதிக அளவில் காணப்படும் எழுத்து யாது?

1. K  2. S  3. T  4. N

10) அதிகளவில் காணப்படும் இலக்கம் யாது?

1. 2  2. 5  3. 3  4. 7

11) ஒரு தடவை மட்டும் காணப்படும் இலக்கம் யாது?

1. 5  2. 2  3. 7  4. 3

★ 12 ஆம் 13 ஆம் வினாக்களுக்கு வெற்றிடத்திற்கு பொருத்தமான இலக்கத்தை தெரிவுசெய்க.

12) (5)(25)(5) / (50)   (3)(12)(4) / (24)   (7)(21)(3) / (—)

1. 21  2. 42  3. 12  4. 24

★ 13 ஆம் 14 ஆம் வினாக்களுக்கு பின்வரும் தரவைப் பயன்படுத்தி விடை தருக

[தோடை 2, ஆப்பிள் 2] → ரூபா 50   [தோடை 5, ஆப்பிள் 2] → ரூபா 80

13) 2 தோடைகள் மற்றும் 3 ஆப்பிள்களின் விலை யாது?

1. ரூபா 65  2. ரூபா 80  3. ரூபா 75  4. ரூபா 45

14) 4 தோடைகளும் 4 ஆப்பிள்களும் வாங்கினால், இரண்டுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

1. ரூபா 40  2. ரூபா 25  3. ரூபா 20  4. ரூபா 35

15) ஒரு பாடசாலையில் 2,510 ஆண் பிள்ளைகளும் 3,719 பெண் பிள்ளைகளும் இருக்கின்றனர். எனின், பாடசாலையிலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

1. 6228  2. 6230  3. 6229  4. 6227

16) ஒரு பஸ்வண்டியில் 38 பயணிகள் இருந்தனர். ஒரு நிறுத்தத்தில் 12 பயணிகள் இறங்கினர். மறு நிறுத்தத்தில் 8 பயணிகள் ஏறினர். பின்னர் 3 பயணிகள் இறங்கினர். எனின், பஸ் வண்டியில் உள்ள மொத்தப் பயணிகளின் எண்ணிக்கை யாது?

1. 32  2. 34  3. 26  4. 31

17) பின்வரும் எண்கோலத்தில் இடைவெளியில் வரவேண்டிய எண் யாது?

42, 84, 168, ....................

1. 340  2. 336  3. 172  4. 170

18) 175cm நீளமுள்ள கம்பியை  இவ் வடிவத்தில் ஐந்து பக்கங்களும் சமமாக வரும் விதத்தில் மடித்தால், ஒரு பக்கத்தின் நீளம் யாது?

1. 35cm  2. 30cm  3. 175cm  4. 40cm

19) வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க

5, 13, 21
13, 21, 29
21, 29, —

1. 37  2. 36  3. 35  4. 34

20) [2|4|6]  [5|7|9]  [8|10|12]  ..........................

1. [11|14|17]  2. [13|15|17]
3. [11|13|15]  4. [11|14|17]

21) அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு

1. அளவோடு உண்ண வேண்டும்
2. எந்தவொரு விடயத்தையும் அளவோடு செய்ய வேண்டும்
3. எந்தவொரு விடயத்தையும் அளவோடு செய்யாவிடின் அது ஆபத்தில் முடியும்
4. அளவுக்கு மிஞ்சினால் அது நஞ்சாகிவிடும்


மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் வழிமுறையைக் கண்டறிதல்








மாணவர்கள் கற்றலில் பல்வேறு வழிமுறைகளைக் கையாள்கின்றனர். இந்த வழிமுறைகள் யாவும் அவர்களது ஞாபகசக்தியின் அளவு, வரையறைக்கு ஏற்ப வித்தியாசப்படும். கற்றலுக்கு மிகவும் அடிப்படையான விடயம் ஞாபகசக்தியாகும். இந்த ஞாபகசக்தியை எந்தளவிற்கு மேம்படுத்த வேண்டும் என்பதில்தான் மாணவர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஞாபகத்தை தக்க வைத்துக்கொள்வதற்கு ஏற்ற மாதிரி கற்றல் செயன்முறையை அமைத்துக்கொள்ள வேண்டும். அதற்காக சில நுட்பங்கள், வழிமுறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

பொதுவாக, பின்வரும் முறைகளில் மாணவர்களின் கற்றல் வழிமுறைகள் அமைகின்றன.

1. கேட்டல்மூலம் கற்றல் (Auditory learning)
2. காட்சிமூலம் கற்றல் (Visual learning)
3. தசை இயக்கத்தின்மூலம் அல்லது தொட்டுணர்வதன்மூலம் கற்றல் (Kinesthetic/Tactile learning)

கேட்டல் மூலம் கற்றல் வழிமுறையை பாடசாலையில், பல்கலைக்கழகங்களில் காணலாம். சில மாணவர்கள், ஏனையவர் கற்பிப்பதை அக்கணமே செவிமடுத்து மனதில் பதித்துக்கொள்பவர்களாக இருப்பர். தான் ஒரு விடயத்தை வாசித்து விளங்குவதைக் காட்டிலும் ஏனையவர் வாசித்துக் காட்டுதல், விளக்கிக் கூறுதல் என்பனவற்றின்மூலம் தாம் அமைதியாக இருந்து கற்கும் விடயங்களை ஆழ் மனதில் பதித்துக்கொள்வர்.

காட்சிமூலம் கற்கும் வழிமுறை எனும்போது, கற்ற விடயங்களை படங்கள், வரைபுகள், குறிகாட்டிகள்மூலம் ஞாபகப்படுத்திக்கொள்வதைக் குறிக்கும். இந்த கற்றல் வழிமுறையைப் பின்பற்றும் மாணவர்களுக்கு ஒரு காட்சியை ஞாபகப் படுத்துவதன்மூலம் இலகுவில் அது தொடர்பான விடயங்களை நினைவிற்கு கொண்டுவரக் கூடியதாக இருக்கும்.

தசை இயக்கம்மூலம் அல்லது தொட்டுணர்வதன்மூலம் கற்கும் வழிமுறையானது பயிற்சி, நேரடியாக ஒரு விடயத்தைக் கண்காணித்தல் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும். இந்த வழிமுறையைப் பயன்படுத்தும் மாணவர்கள் செயற்படுத்தல், பயிற்சி பெறுதல் போன்றவற்றின் மூலமே தாம் கற்ற விடயங்களை நினைவில் வைத்துக்கொள்வர்.

இத்தகைய வழிமுறைகளில் ஒன்றையோ, இரண்டையோ அல்லது மூன்று வழிமுறைகளையும் பயன்படுத்தும் மாணவர்களும் நம் மத்தியில் காணப்படுகின்றனர். ஆகவே, கற்றலை வாசித்தல், விளங்கல் என்பவற்றோடு மட்டும் வரையறை செய்துகொள்ளாமல் நுட்பங்கள், புதிய வழிமுறைகள் என்பனவற்றையும் சேர்த்து பரவலாக்கிக் கொள்ளவேண்டும். ஏனெனில், ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் கற்ற விடயங்கள் ஞாபகத்திற்கு வராவிட்டாலும்கூட, பயன்படுத்தப்பட்ட நுட்பங்கள், வழிமுறைகள் என்பன மூலமாக குறித்த விடயங்களை நினைவிற்குக் கொண்டுவரக்கூடியதாக இருக்கும்.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# நமது ஞாயிற்றுத் தொகுதியின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ஆய்வில் தகவல்

நமது ஞாயிற்றுத் தொகுதி சில பில்லியன் ஆண்டுகளின் பின்னர் எவ்வாறு காணப்படும் என்பது தொடர்பில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறந்த விண்மீன்கள் இரண்டை ஆய்வுக்கு உட்படுத்தியதை அடுத்தே, இது தெரியவந்துள்ளது. கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழக வானியலாளர்கள் சிலரே இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளனர்.



அவர்களின் ஆய்வுக்கமைய, சில பில்லியன் ஆண்டுகளுக்குப் பின்னர், சூரியனின் அணுக்கரு எரிபொருள் குறையும்போது, அது வெளிப்பக்கமாக விரிவடைந்து, ஒரு காலத்தில் அதன் வெளிப்படலங்கள் வெடித்துச் சிதறும். இதன்போது சூரியனை அண்மித்ததாக உள்ள சில கோள்கள் சூரியனால் உள்வாங்கப்படும் எனவும் அப்போது விண்கற்கள் அவற்றின் சுற்றுவட்டத்தில் இருந்து விலகிச் செல்லும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இவை தவிர, நமது பால் வீதி விண்மீன் பேரடையில் கோள்களின் நிலை குறித்து மேலும் பல தகவல்களையும் இந்த ஆய்வுமூலம் பெறக்கூடியதாக இருந்ததாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.



பூமியில் இருந்து 150 ஒளியாண்டுகள் தூரத்தில் உள்ள டாரஸ் எனும் விண்மீன் குழுமத்திற்குரிய இரண்டு இறந்த விண்மீன்களை, ஹபள் விண்வெளித் தொலைநோக்கிமூலம் ஆராய்ந்ததை அடுத்தே, இது தொடர்பில் கண்டறியப்பட்டுள்ளது.

# பூமியுடன் மோதியதனாலேயே நிலவில் நீர் உருவானது...!

நிலவின் ஆழமான பகுதியில் உருவான நீரானது, புவியில் இருக்கும் நீரின் ஆதாரத்தை ஒத்திருப்பதாக அண்மைய ஆய்வொன்றினூடாக தெரியவந்துள்ளது. நிலவில் நீர் துகள்கள் உருவாகுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அமெரிக்காவின் பிரவுன் பல்கலைக்கழக மண்ணியல்துறையினர் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். அதன்போதே, இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் அல்பெர்டோ சால் தலைமையிலான குழுவினரே, இந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளனர்.



அதன்போது 450 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் பூமியும் நிலவும் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டன. அப்போது பூமியில் இருந்த நீர் மற்றும் அதன் துகள்கள் நிலவுக்கு இடம்மாறியிருக்க வேண்டும் என்று அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கடந்த 2011 ஆம் ஆண்டு நடத்திய ஆய்வில், பூமியில் உள்ள எரிமலைக் குழம்பு துகள்களும்கூட நிலவின் மண்ணில் காணப்படுகின்றன என்பதும் தெரியவந்துள்ளது.

எனவே, பூமியுடன் மிக கடுமையாக மோதியதனாலேயே, பூமியிலிருந்து நீர் இடம்மாறி, நிலவில் நீர் உருவாகி இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஞ்சண காளான்களிலிருந்து பெற்றோல்!

ஒஸ்ட்ரியா நாட்டின் வியன்னா பல்கலைக்கழக விஞ்ஞானிகள், பூஞ்சண காளான்களின் வளர்ச்சி பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். அதன்போது, பூஞ்சணக் காளான்களைப் பயன்படுத்தி பெற்றோலை உற்பத்தி செய்யலாம் என்பது தெரியவந்துள்ளது. இந்தப் பூஞ்சண காளான்களில் மரபணு மாற்றங்களை ஏற்படுத்தினால், அவற்றை கொழுப்பு சத்தை அதிகமாகக்கொண்ட காளான்களாக உற்பத்தி செய்ய முடியும் என்பதுடன், இதனூடாக பெற்றோல் தயாரிக்கலாம் என்பதையும் கண்டறிந்துள்ளனர்.

மேலும், பூஞ்சணக் காளான்கள் விரைவாக வளர்ச்சிபெறக்கூடியவை என்பதனால், இவற்றை அதிகளவில் உற்பத்தி செய்யலாம் என்பதுடன், அதிகளவான பெற்றோலையும் தயாரிக்கலாம் என்றும் குறிப்பிடுகின்றனர். எனவே, அதிக செலவின்றி பெற்றோலைத் தயாரிக்க இது மிகச் சிறந்த முறை என்பதனால், இதுபற்றிய மேலதிக ஆராய்ச்சிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன என்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.





## விஜய் மாணவர் கழகம்



கி.சுமுகன், முருகமூர்த்தி கோயில் வீதி, உடுவில். அங். இல: 5/188



மு.சஹீகா பர்வின், யஹலத்தன்னை, கண்டி. அங். இல: 5/189



ஜே.அப்சீர் அஹ்மத், அம்பாறை வீதி, சம்மாந்துறை. அங். இல: 5/190



பி.சரண்யா, சயிஸ்டன் ப்ளேஸ், அளவத்துகொட. அங். இல: 5/191



எம்.யூ.மப்றா, மத்திய வீதி, புதிய காத்தான்குடி-03 அங். இல: 5/192



ஜெ.ருஸ்மிக்கா, பிற்றத்மலை, அப்புத்தளை. அங். இல: 5/193



பி.வேணுபிரகாஷ், அம்மன் கோயில் வீதி, கல்முனை-02[B] அங். இல:5/194



எஸ்.எம்.ரம்ஷான், அகலகொடுவ, புஸ்ஸல்லாவ. அங். இல: 5/195



இ.ஜெபஜெரின், காளி கோவிலடி, மூளாய். அங். இல: 5/196



எம்.றிகான், அக்கரைச்சேனை, மூதூர்-01. அங். இல: 5/197



பூ.டானியல் ராஜ், செட்டிக்குளம், வவுனியா. அங். இல: 5/198



எச்.எம்.ஹஸ்லான், புத்தளம் வீதி, ஜயபிம. அங். இல: 5/199

# மாணவர்களுக்கு ஆசிரியரின் பங்களிப்பு

கல்வியை வழங்கும் நிறுவனங்கள் பலவற்றுள் பாடசாலைகள் ஆற்றல் வாய்ந்த பின்னணியுடன் செயற்படுகின்றன. இத் தருணத்தில் மாணவரின் கற்றல் தொடர்பான மனப்பாங்குகளை உருவாக்குவதில் முக்கியமான இடத்தை ஆசிரியர்கள் கொண்டிருக்கின்றார்கள். அறிவு துரிதமாக விருத்தியடைகின்ற, மாற்றமடைகின்ற யுகத்தில் மாணவர்களின் அறிவினை வளர்த்தெடுப்பதும் தொழில் உலகிற்குத் தேவையான ஆளுமையைக் கொண்டவர்களாகவும் மாற்றும் செயன்முறையின்பால் மாணவர்களை பழக்கப்படுத்துவதுமே இன்றைய ஆசிரியர்கள் ஆற்றவேண்டிய முக்கியமான பணிகளாக உள்ளது. இதற்காக, ஆசிரியர்கள் தங்களது அறிவினைத் தினமும் மேம்படுத்திக் கொள்ளவேண்டும்.



அந்தவகையில், பொதுவாக ஆசிரியர்களிடமிருந்தும் சில தகைமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அவையாவன:

- கல்வியின் புதிய போக்குகளுக்கு அமைய மீள்பயிற்சி பெறல்
- தமது அனுபவங்களை மீள உயிர்த்தெழச் செய்தல்
- புதிய விடயங்களைத் தினமும் கற்றுக்கொள்ளல்
- பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளல்
- விடயங்களை ஆய்வுசெய்து சிந்தித்தல்
- கற்றல்-கற்பித்தல் தொடர்பான பயிற்சிகளை மேற்கொள்ளல்
- தலைமைத்துவ ஆற்றலை விருத்தி செய்தல்.

ஆசிரியர் ஒருவருடைய கற்பித்தலிலேயே, நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது என்று நம்பப்படும் நிலையில் ஆசிரியருடைய தரம் பேணப்பட வேண்டியதும், ஆசிரியரின் கல்விச் செயற்பாடுகள் வினைத்திறனுடன் இடம்பெற வேண்டியதும் அவசியமானதாகும். அதற்கு 'ஆசிரியர் கல்வி என்பது வெறும் தகைமைச் சான்றிதழைப் பெறுவதற்கான ஒரு கல்விச் செயற்பாடு' என்ற மனநிலை ஆசிரியரிடம் இருக்கக்கூடாது. இவற்றுக்கு அப்பால் ஆசிரியர் தொழிலின் 'உண்மைப் பெறுமானத்தை' உணர்ந்து செயற்பட வேண்டும்.

(தொடரும்)

தொகுப்பு: றினோஸ் ஹனீபா
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)




விஜய் மாணவர் கழகம்

படத்தை இங்கே ஒட்டவும்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

பாடசாலை: ..............................

வகுப்பு: ..............................

திகதி: ..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.இல 2087
கொழும்பு


SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் பேச வேண்டுமா?

உங்கள் Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்றுக்கொள்ளவும் மேலும் முக்கிய செய்திகள், கல்வி, வாழ்க்கை வழிகாட்டல்கள், Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்), பொது அறிவுத் தகவல்கள், இலங்கையின் அடிப்படைச் சட்டங்கள், மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துணுக்குகள், அரச வேலைவாய்ப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களை பெற்றுக்கொள்ள அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகின் முதலாவது 5G தொழில்நுட்பம்; பரிசோதனை செய்தது Samsung நிறுவனம்!

Samsung நிறுவனமானது, உலகில் முதல் முறையாக 5G தொழில்நுட்பத்தை பரிசோதித்துப் பார்த்துள்ளது. இதன்மூலம் தற்போதளவில் நாம் பெறும் இணைய வேகத்தைவிட, பல மடங்கு வேகமான இணைய இணைப்பை பெறமுடியும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த பரிசோதனையின்போது, Samsung நிறுவனமானது, 5G தொழில்நுட்பத்தை 28GHz அலை கற்றையில் சோதித்து, 1GB தகவலை ஒரே செக்கனில் பரிமாறி உள்ளது. அதாவது, இதன்மூலம் ஒரு முழுத் திரைப்படத்தை நாம் ஒரு செக்கனுக்கும் குறைவான நேரத்தில் தரவிறக்கம் செய்ய முடியும். இது தற்போது நாம் பயன்படுத்தும் 2G மற்றும் 3G நுட்பங்களைவிட பல ஆயிரம் மடங்கு வேகமானது.

இதன்மூலம் மிக அதிக தரமுள்ள HD வீடியோக்களை மிகக் குறைந்த நேரத்தில் பரிமாறிக்கொள்ள முடியும். அத்துடன், 3D திரைப்படங்களையும் பார்க்கலாம் என்பதோடு, 3D விளையாட்டுக்களையும் விளையாடலாம். Ultra HD வீடியோக்களை Real time Streaming மூலமும் பார்க்கலாம்.

ஆக, தகவல் பரிமாற்றத்தில் இது ஒரு மிகப்பெரிய தொழில்நுட்பப் பாய்ச்சலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த 5G தொழில்நுட்பமானது, 2020 இலிருந்து பயனாளர்களுக்குக் கிடைக்கும் என்று Samsung நிறுவனம் அறிவித்துள்ளது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஜூன் மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.







# வளைந்து, நெளிந்து உங்களை Alert செய்யும் MorePhone கள்

இன்றைய Smartphone கள், உங்களுக்கு அழைப்போ, குறுஞ்செய்தியோ வந்தால், அது குறித்து சத்தம் எழுப்பியோ அல்லது அதிர்வுமூலமோ உங்களை Alert செய்கின்றன.

ஆனால், வருங்காலத்தில் வர இருக்கும் Smartphone கள் வளைந்து, நெளிந்து உங்களை Alert செய்யும் அதிசயத்தை நிகழ்த்தக் காத்திருக்கின்றன.

கெனடாவை சேர்ந்த Queen's University Human Media Lab நிறுவன ஆராய்ச்சியாளர்களே, இந்த அதிசயக் கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளனர். இந்த புதிய வகை Smartphone களுக்கு அவர்கள் 'MorePhone' என்று பெயரிட்டிருக்கின்றனர்.




இன்றைய Smartphone கள், அழைப்புக்கள் வரும்போது ஒலி எழுப்புகின்றன அல்லது அதிர்வை உண்டாக்கி பயனாளர்களை Alert செய்கின்றன. ஆக, இந்த Phone களை கைகளிலோ, சட்டைப் பைகளிலோ வைத்திருக்கும்போதுதான் அவற்றின் Alert களை நாம் உணர முடியும்.

ஆனால், MorePhone கள், அப்படியில்லை. அவை வளைந்து, நெளிந்து எமது கவனத்தை ஈர்க்கும் தன்மையைக் கொண்டிருப்பதால், இவை மேசைகளில் வைக்கப்பட்டிருந்தாலும் எமக்கு அவற்றின் அசைவை அறியமுடியும். இந்த MorePhoneகள் இன்னும் 10 வருடங்களுக்குள் பொதுப்பாவனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்தட்டின் நிலையை அறிய ஓர் இலகு வழிமுறை

கணினியில் இயங்குதளத்தினை அடிக்கடி நிறுவும்போது, வன்தட்டின் (Hard Disk) ஆயுள்காலம் குறைந்துவிடும். அவ்வாறே, அடிக்கடி பல்வேறுபட்ட எப்ளிகேஷன்களை கணினியில் நிறுவிப் பின் நீக்கும்போதும் வன்தட்டில் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். மேலும், வன்தட்டினை முறையாகப் பராமரிக்காமல் இருந்தாலும், அதன் ஆயுள்காலம் கண்டிப்பாக குறைந்துவிடும்.


இதுபோன்ற பிரச்சினைகள் வரும் முன்னரே, நம் கணினி வன்தட்டு என்ன நிலையில் உள்ளது என்பதை நம்முடைய இயங்குதளத்தின் உதவியுடன் அறிந்துகொள்ள முடியும். பின்வரும் வழிமுறைகளினூடாக, அதனை நிறைவேற்றிக்கொள்ளலாம்.

* முதலில் Run இற்குச் சென்று அதில் cmd என்று உள்ளிட்டு, Ok பொத்தானை அழுத்தவும். (படம் 001)




(படம் 001)


* இதனை அடுத்து, கட்டளைப் பலகை (Command prompt) Open ஆகும். அதில் wmic என்று உள்ளிட்டு Enter பொத்தானை அழுத்தவும். (படம் 002)


(படம் 002)

* அடுத்து, diskdrive get status என்று தட்டச்சு செய்து Enter பொத்தானை அழுத்தவும். (படம் 003)


(படம் 003)

* அப்போது உங்கள் வன்தட்டானது, நன்றாக இருந்தால் 'Ok' என்ற செய்தி வரும். மிகவும் நன்றாக இருப்பின் 'Ok, Ok' என்று வரும். இதிலிருந்து நமது கணினியின் வன்தட்டின் நிலையை அறிந்துகொள்ளலாம். (படம் 004)


(படம் 004)







# இலகுவாக புகைப்படங்களை Edit செய்ய 'PC Image Editor'

புகைப்படங்களை Edit செய்ய பல்வேறு மென்பொருட்கள் இருந்தாலும், கணினியைப் பயன்படுத்தும் எல்லோருக்கும் அந்த அனைத்து மென்பொருட்களையும் முழுமையாகப் பயன்படுத்தத் தெரிந்திருக்காது. எனினும், தற்போது அறிமுகமாகியுள்ள சிறிய அளவிலான மென்பொருட்களின் உதவியுடன் யார் வேண்டுமானாலும் Photo Editing வேலைகளை இலகுவாகவும் சிறப்பாகவும் செய்து முடிக்க முடியும். அதற்கு உதவும் மென்பொருட்களில் ஒன்றுதான் 'PC Image Editor'.

இந்த மென்பொருளை கணினியில் நிறுவிக்கொள்ளுங்கள். பின்னர் கணினியை ஒருமுறை restart செய்துகொள்ளுங்கள். அதன்பின்னர் PC Image Editor மென்பொருளை Open செய்யுங்கள். அதில் Open என்னும் Button ஐ அழுத்தி edit செய்யவேண்டிய படத்தைத் தெரிவுசெய்துகொள்ளுங்கள். அதன்பின்னர், Tool களின் உதவியுடன் படத்தினை உங்களுக்குத் தேவையானபடி edit செய்துகொள்ளலாம்.








இது அளவில் மிகச்சிறிய மென்பொருள் என்பதால், ஏனைய பெரிய மென்பொருட்கள்போல உங்கள் கணினியின் இடத்தையும் பிடித்துக்கொள்ளாது. இதன் புதிய பதிப்பான 'PC Image Editor 5.3' அண்மையில் வெளியாகியுள்ளது. இதனை Windows 8,7 XP and Vista ஆகிய இயங்குதளங்களில் பயன்படுத்தலாம். இதனை http://www.program4pc.com/image_editor.html#page=page-1 எனும் இணைப்பில் சென்று இலவசமாகத் தரவிறக்கிப் பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வெட்டவும்

# zoolz: இலவச இணைய சேமிப்பகம்




இணைய சேமிப்பகத்தின் பயனை இன்று பலரும் அறிந்து வைத்துள்ளனர். குறிப்பிட்ட தளத்துக்குள் எமது கோப்புக்கள், ஆவணங்களை தரவேற்றுவதன்மூலம், உலகின் எந்த ஒரு மூலையில் இருந்தும் எந்த ஒரு கணினியைப் பயன்படுத்தியும் எமது கோப்புக்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதோடு, இன்னும் பல வகையான அனுகூலங்களையும் அனுபவிக்க முடிகின்றது.



இணையவெளியில் இவ்வாறு கோப்புக்களைத் தரவேற்றி வைக்கக் கூடிய பல தளங்கள் இலவசமாகவே சேவைகளை வழங்கி வருகின்றன. அத்தகைய தளங்களின் வரிசையில் இப்போது 'zoolz' எனப்படும் ஓர் இணைய சேமிப்பகமும் இணைந்துள்ளது. இந்தத் தளத்தில் எவ்வித வேகவரையறையுமின்றி தரவுகளை தரவேற்றவும் தரவிறக்கவும் முடியும். நாம் தரவேற்றும் தரவுகளை மிகவும் பாதுகாப்பான முறையில் Encrypts செய்து இத்தளம் பாதுகாக்கின்றது. Right-click menu ஊடாக தரவுகளை backup செய்யும் வசதிகளையும் இத்தளம் தருகிறது.

Mobile Phone மூலமாக இயக்குவதற்கான Application ஐயும் இத்தளம் தருகின்றது. மேலும் பல சிறப்பம்சங்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் தளத்தின் சேவையானது, முதல் 1,000,000 கணக்குகளுக்கு 100 GB வரையான இலவச இட வசதியை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.




# Desktop இல் பூச்சிகள்!!

நீங்கள் பயன்படுத்தும் கணினியின் desktop இல் வண்ணத்துப்பூச்சிகள், ஈக்கள், கரப்பான் பூச்சிகள், வண்டுகள் ஊர்ந்து செல்ல வேண்டும் என நினைத்தால், அந்த விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள ஓர் இணையத்தளம் அறிமுகமாகியுள்ளது. அதுதான் en.freedesktopsoft.com என்பதாகும்.







இந்த இணையத்தளத்திற்கு சென்று முதலில் அதனை download செய்துகொள்ளுங்கள். அதன் பின்னர் உங்களுக்கு desktop icon ஒன்று வரும். அதை click செய்யச் செய்ய பூச்சிகள் அதிகம் ஆகிக்கொண்டே வரும். அதைக் குறைக்க வேண்டுமானால், அந்தப் பூச்சிகளின்மீது double click செய்யலாம்.






# Google Reader இற்குப் பதிலாக இருக்கிறது... feedly



எதிர்வரும் ஜூலை முதலாம் திகதியானது, இணையப் பயனர்கள் பலருக்கும் மறக்கமுடியாத சோகமான நாளாக மாறப்போகிறது. Google நிறுவனமானது, தனது மிகப் பிரபலமான சேவைகளுள் ஒன்றான Google Reader ஐ ஜூலை முதலாம் திகதி முதல் நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளமையே இதற்குக் காரணமாகும்.

Google Reader என்பது, நாம் தகவல்களை வாசிக்கும் தளங்களை அந்தந்தத் தளத்திற்குச் செல்லாமல் ஒரே இடத்தில் வாசிக்கும் வசதியை வழங்கும் சேவையாகும். எவ்வாறாயினும், Google இந்தச் செய்தியை அறிவித்தவுடன், பலரின் தெரிவாக 'Feedly' என்ற தளம் இருந்தது. அதன்படி, 48 மணி நேரத்தில் 5,00,000 பேர் Google Reader இல் இருந்து Feedly இற்கு மாறி இருந்தார்கள். தற்போதளவில் அந்த எண்ணிக்கை பல மில்லியனாக மாறி இருப்பதாக தரவுகள் கூறுகின்றன.

Feedlyஇலுள்ள ஒரு சிறப்பு என்னவென்றால், Google Reader இல் நீங்கள் செய்துவைத்திருந்த Setting களை அப்படியே Feedly க்கு மாற்றிவிடலாம் என்பதாகும்.





அத்துடன், இதன் வடிவமைப்பும் Google Reader போலவே உள்ளது. சில விடயங்களில் குறைபாடுகள் இருந்தாலும் பயனர்களுக்கு நிறைவான சேவையை வழங்குவதாகவே உணரமுடிகின்றது. http://feedly.com என்பது Feedly தளத்தின் முகவரியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விஜய் 2013, ஜூன், 19, புதன்கிழமை V

# 'My Documents' Folder ஐ வேறு Drive இற்கு மாற்றுவது எப்படி?

உங்கள் கணினியில் 'My Documents' என்ற Folder வழமையாக 'C' Drive இல்தான் அமைந்திருக்கும். பொதுவாக, எல்லோரும் தாங்கள் தயாரிக்கும் கோப்புக் களை அல்லது தரவிறக்கம் செய்யும் கோப்புக் களை சேமிக்கும்போது, அவை எப்போதும் My Documents Folder இல்தான் Default



(படம் 001)



(படம் 002)

ஆக சேமிக்கப்படும்.

ஆனால், ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில், கணி னியை Format செய்யும்போது, My Documents இல் உள்ள கோப்புக்களை Backup எடுக்க மறந்தால், அவை அழிக்கப்பட்டு, மீட்டு எடுக்க முடியாமல் போய்விடலாம் அல்லது வைரஸ் ஏதேனும் கணினியைச் செயல் இழக்கச் செய்து விட்டால், அந்த நேரத்தில் 'C' Drive இனை மீட்பது என்பது கொஞ்சம் கடினமான வேலை யாகிவிடும். இதன்போதும் My Documents இல் இருக்கும் கோப்புக்களை இழக்க வேண்டி வந்துவிடலாம்.

ஆனால், My Documents ஐ அப்படியே கணினியில் வேறு Drive இற்கு மாற்றிவிட்டால், இந்தப் பிரச்சினையிலிருந்து தப்பிக்கொள்ளலாம். இதனை எவ்வாறு செய்வது என்று இங்கு பார்ப்போம்.

1. Start இற்குச் சென்று My Documents இல் Right Click செய்யுங்கள். (படம் 001)


2. தோன்றும் Window வில் properties என்பதைத் தெரிவு செய்யுங்கள். (படம் 002)

3. Target என்ற இடத்தில் தற்போதைய My Documents இன் முகவரி இருக்கும் (C:/Documents and Settings/PC/My Documents). (படம் 003)


4. பின்னர் கீழே உள்ள Move என்ற Button ஐக் க்ளிக் செய்து, புதிய முகவரியை தெரிவுசெய்ய வேண்டும். (படம் 004)

**உதாரணமாக:** நீங்கள் 'C' Drive விலிருந்து 'D' Drive விற்கு மாற்றுவதாக இருந்தால், 'D' Driv ஐ தெரிவுசெய்ய வேண்டும்.


5. அதன் பின்னர் Ok Button ஐ அழுத்தி, Apply என்பதை கொடுத்தால், My Documents இலுள்ள கோப்புகள் எல்லாம் நீங்கள் விரும்பிய 'D' Drive விற்கு மாறி விடும்.



(படம் 003)



(படம் 004)



(படம் 005)

இதனைத் தொடர்ந்து, My Documents இல் சேமிக்கும் கோப்புக்கள் எல்லாம் 'D' Drive இலுள்ள My Documents Folder இனுள்தான் சேமிக்கப்படும். இனிவரும் காலங்களில் 'C' Drive இனை Format செய்யவேண்டி வந்தாலும் உங்கள் My Documents கோப்புகளுக்குப் பிரச்சினை வராது. அவை பத்திரமாக 'D' Drive இல் இருக்கும்.




# F.B.I கேட்கும் தகவல்களை வழங்க வேண்டும்!

## Google நிறுவனத்திற்கு அமெரிக்க நீதிமன்றம் உத்தரவு

Google இணையத்தளத்தைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் குறித்து, அமெரிக்க உளவுத் துறையான F.B.I கேட்கும் தகவல்களை, Google நிறுவனம் வழங்க வேண்டும் என்று San Francisco மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தின் ஆணையைப் பெறாமலேயே, தமக்கான தகவல்களை வழங்கும்படி Google நிறுவனத்திற்கு F.B.I உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தது. எனினும், இணையத்தள சேவை வழங்குவோர், தொலைத்தொடர்பு நிறுவனங்கள், வங்கிகள் உள்ளிட்ட அமைப்புகளிடம் தகவல்களைக் கேட்பது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என Google சார்பில் வாதமொன்று முன்வைக்கப்பட்டது. எனினும், அந்த வாதத்தை நீதிமன்றம் நிராகரித்தது.

2001 செப்டெம்பர் 11 ஆம் திகதி இரட்டைக் கோபுரம் தகர்க்கப் பட்ட பின்னர், அமெரிக்க நாடாளுமன்றத்தில் புதிய சட்டம் ஒன்று நிறைவேற்றப் பட்டது.




அதன்படி, அந்தநாட்டு உளவுத்துறையின் தீவிரவாதத் தடுப்பு அதிகாரிகள், நீதிபதியின் ஒப்புதல் இல்லாமலேயே உத்தரவுகளைப் பிறப்பிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், நீதிமன்றத்தின் ஆணையைப் பெறாமலேயே, தமக்கான தகவல்களை வழங்கும்படி Google நிறுவனத்திற்கு F.B.I உத்தரவுகளைப் பிறப்பித்தது சரிதான் என்று San Francisco மாவட்ட நீதிபதி சூசன் இல்ஸ்டான் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், இந்தத் தீர்ப்பை எதிர்த்து Google நிறுவனம் மேல்முறையீடு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக பாடநெறி 38

**தொடர்பாடல் மாதிரிகளின் விளக்க நிலைகள், கருத்தியல்கள் தொடர்பாக, பல அறிஞர்கள் தமது வரைவிலக்கணங்களை இம்மாதிரியை அடிப்படையாகக்கொண்டு பின்வருமாறு முன்வைத்துள்ளதை அறியக்கூடியதாக உள்ளது.**

## அரிஸ்டோட்டல் - தொடர்பாடல் மாதிரி



✱ அனுப்புநர்,செய்தி, மக்கள் ஆகியன இம்மாதிரியின் அடிப் படைக் கூறுகளாக அமைகின் றன.

✱ அனுப்புநரின் பண்பும் சொல்பவரின் முறையும் பெறுநரை கேட்கத் தூண்டும்.

✱ செய்தி உள்ளத் தைத் தொடுகின்ற பொழுது, பெறுநர் அச்செய்தியை முழு மையாகக் கேட்க விளைகின்றார்.

✱ ஒரு செய்தியானது, பெறுநரின் உணர்வுகளைத் தூண்டி அவரை செயற்படத் தூண்டுகின்றபோது, வலுவுள்ள தொடர்பாக அது அமை கின்றது என்கின்றார்.

## ஹரோல்ட் லெஸ்வெல் (1948) - தொடர்பாடல் மாதிரி

✱ அரசறிவியல் பேராசிரியர் ஹரோல்ட் லெஸ்வெல் அவர்கள் 1948 ஆம் ஆண்டில் தொடர்பாடல் மாதிரியை அறிமுகம் செய் ததுடன், தொடர்பாடல் வரைவிலக்கணத் தையும் முன்வைத் துள்ளார்.

Communicator → Message → Medium → Receiver → Effect

✱ ஒருநபர் ஏதாவது ஒரு தகவலை ஏதாவது அலைவரி சையில் யாரேனும் நபருக்கு, ஏதேனுமொரு தாக்கத்தை ஏற்படுத்துவதாக முன்வைப்பது தொடர்பாடல் என வரைவிலக்கணப்படுத்துகின்றார்.

✱ யாருக்கு யார்? எந்த ஊடகத்தில் என்ன சொல்கின்றார்? அதன் விளைவுகள் என்ன? என்ற கேள்வியை உருவாக்கி, அதன் அடிப்படையில் தொடர்பாடல் மாதிரியை அறிமு கம் செய்கிறார்.

✱ இம்மாதிரி யின் அடிப்படை உட்கூறுகளைப் பகுப்பாய்வு செய்வதன் ஊடாக, விளக்கமளிக்க முனைகின்றார்.

✱ தொடர்பாடுபவர் என்பவர் தொடர்பா டல் செயன்முறையை ஆரம்பிக்கும் இடத்தில் இருப்பார். தகவல் தொடர்பாடுப வர் ஒரு நபராகவோ அல்லது நிறுவனமா கவோ காணப்படலாம். தொடர்பாடுபவரி னால் வெளியிடப்படுபவை செய்தி அல்லது தகவல் எனக் குறிப்பிடப்படுகின்றன.

✱ தகவல் என்பதை இவர், அறியப்பட வேண்டிய விடயம், தெரிவிக்கப்பட வேண்டிய விடயம், மற்றும் பரிமாற்றப்பட வேண்டிய விடயம் முன்வைக்கப்படுகின்ற விடயம் என்றும் அவை சமூக நிகழ்வின் ஊடாக உருவாவதாகவும் சுட்டிக்காட்டுகின்றார். செய்தியில் இடம்பெற வேண்டிய அம்சங்களை தொடர்பாடுபவரே தீர்மானிக்கின்றார் என்றும் குறிப்பிடுகின்றார்.




**Aristotle's Model of Communication**



(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



இங்கு தரப்பட்டுள்ள பழச்சாற்றினை ஒரே ஒரு எலியால் மாத்திரமே வழியைப் பின்பற்றிச் சென்று அருந்த முடியும். அது எந்த எலி என்பதைக் கண்டறிந்து அந்த எலிக்கு வழிகாட்டுங்களேன்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| u | t | b | k | c | y | b | f | d | l | w | c |
| y | m | h | c | o | m | e | j | v | d | f | d |
| y | d | n | r | c | o | f | c | l | t | a | w |
| x | d | l | q | e | a | i | y | u | f | o | r |
| w | f | f | u | b | e | n | i | o | p | l | c |
| e | h | h | o | f | k | d | o | r | j | k | p |
| s | j | e | l | z | u | g | a | i | m | v | i |
| s | h | x | r | b | v | n | m | q | l | m | h |
| p | q | c | j | e | d | y | n | m | h | q | h |
| p | o | i | h | e | l | p | b | y | z | g | c |
| a | w | a | y | t | u | s | x | o | m | k | n |
| x | w | m | a | k | e | f | z | d | o | w | n |

இங்குள்ள ஆங்கில எழுத்துக்களில் சொற்கள் பல மறைந்துள்ளன. அந்த சொற்கள் எவை என்பதை வரிசைப்படுத்துக.

எண்களின் வரிசைப்படி, புள்ளிகளை இணைத்து படத்தைப் பூர்த்திசெய்து, உருவத்தைக் கண்டறிக.

## தளிர்கரம்



இவற்றில் ஒரு உருவம் மட்டும் ஏனையவற்றுடன் சம்பந்தமற்றது. அந்த உருவத்தைச் சுற்றி வட்டமிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் வசந்திக்கும் வங்கி முகாமையாளருக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**වසන්ති:** **ආයුබෝවන් මහත්මයා.**
ஆயுபோவன் மஹத்மயா.
**வசந்தி:** **வணக்கம் ஐயா.**

**කළමණාකරු:** **ආයුබෝවන්, වාඩිවෙන්න.**
ஆயுபோவன், வாடிவென்ன.
**முகாமையாளர்:** **வணக்கம், உட்காருங்கள்.**

**වසන්ති:** **මට බැංකු ගිණුමක් ආරම්භ කරන්න ඕනේ.**
மட்ட பெங்கு கிணுமக் ஆரம்ப கறன்ன ஓனே.
**வசந்தி:** **எனக்கு வங்கிக் கணக்கொன்று ஆரம்பிக்க வேண்டும்.**

**කළමණාකරු:** **ඔයාට ඉතිරි කිරීමේ ගිණුමක්ද, ස්ථාවර ගිණුමක්ද ඕනේ?**
ஒயாட்ட இதிறி கிறிமே கிணுமக்த, ஸ்தாவர கிணுமக்த ஓனே?
**முகாமையாளர்:** **உங்களுக்கு சேமிப்புக் கணக்கா, நிலையான கணக்கா தேவை?**

**වසන්ති:** **ඉතිරි කිරීමේ ගිණුමක් සර්.**
இதிறி கிறிமே கிணுமக் சேர்.
**வசந்தி:** **சேமிப்புக் கணக்கு சேர்.**

**කළමණාකරු:** **මේ පෝරම ටික පුරවල, අතන ඉන්න ලිපිකාරිනියට දෙන්න.**
மே போரம டிக்க புரவல, அதன இன்ன லிபிகாரினியட்ட தென்ன.
**முகாமையாளர்:** **இந்த விண்ணப்பத்தை நிரப்பி அங்கே இருக்கும் லிகிதரிடம் கொடுங்கள்.**

**වසන්ති:** **මිස්, මට ඉතිරි කිරීමේ ගිණුමක් අරඹන්න ඕනේ.**
மிஸ், மட்ட இதிறி கிறிமே கிணுமக் அரம்பன்ன ஓனே.
**வசந்தி:** **மிஸ், எனக்கு சேமிப்புக் கணக்கொன்று ஆரம்பிக்க வேண்டும்.**

**ලිපිකාරිනිය:** **පෝරමය පිරෙව්වාද?**
போரமய பிரெவ்வாத?
**லிகிதர்:** **விண்ணப்பத்தை நிரப்பினீர்களா?**

**වසන්ති:** **ඔව් මිස්, මෙන්න.**
ஒவ் மிஸ், மென்ன.
**வசந்தி:** **ஆம் மிஸ், இதோ.**

**ලිපිකාරිනිය:** **ඔයාගේ හැඳුනුම්පත දෙන්න.**
ஒயாகே ஹெந்துனும்பத தென்ன.
**லிகிதர்:** **உங்களுடைய அடையாள அட்டையைத் தாருங்கள்.**

**වසන්ති:** **මෙන්න මිස්.**
மென்ன மிஸ்.
**வசந்தி:** **இந்தாருங்கள் மிஸ்.**

**சிறிது நேரத்தில்...**

**ලිපිකාරිනිය:** **මිස්, මෙතන අත්සන් කරන්න. මෙන්න මිස් ගේ බැංකු පොත.**
மிஸ், மெதன அத்சன் கறன்ன. மென்ன மிஸ்கே பெங்கு பொத.
**லிகிதர்:** **மிஸ், இந்த இடத்தில் கையொப்பம் இடுங்கள். இதோ, உங்களுடைய வங்கிப் புத்தகம்.**

**වසන්ති:** **බොහෝම ස්තුතියි.**
பொஹோம ஸ்துதிய்.
**வசந்தி:** **மிக்க நன்றி.**

### பயிற்சி



**சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. கணக்கொன்று ஆரம்பிக்க வேண்டும்.
..........................................................................................

ii. விண்ணப்பத்தை நிரப்பினீர்களா?
..........................................................................................

iii. கையொப்பம் இடுங்கள்.
..........................................................................................




இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற 'உடன்பாடு நிலை' வாக்கியங்களை, 'Did' எனும் இறந்தகால துணை வினைச் சொல்லின் (Past Tense Auxiliary Verb) உதவியுடன், 'வினா நிலை' வாக்கியங்களாக மாற்றியமைப்பது பற்றி மேலும் உதாரணங்களை அவதானிப்போம்.

(அ) அவன் தனது பணத்தைச் செலுத்தினான்.
He paid his money.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) அவன் தனது பணத்தை செலுத்தினானா?
Did he pay his money?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

* He paid. (Affirmative)
அவன் செலுத்தினான். (உடன்பாடு)

* Did he pay? (Interrogative)
அவன் செலுத்தினானா? (வினா)

**குறிப்பு:**
paid- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
pay- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

(இ) அவள் புதிய ஒரு பேனா வாங்கினாள்.
She bought a new pen.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஈ) அவள் புதிய ஒரு பேனா வாங்கினாளா?
Did she buy a new pen?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

* She bought. (Affirmative)
அவள் வாங்கினாள். (உடன்பாடு)

* Did she buy? (Interrogative)
அவள் வாங்கினாளா? (வினா)

**குறிப்பு:**
bought- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
buy- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

(உ) அது தோட்டத்துக்குள் ஓடியது.
It ran into the garden.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) அது தோட்டத்துக்குள் ஓடியதா?
Did it run into the garden?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

* It ran. (Affirmative)
அது ஓடியது. (உடன்பாடு)

* Did it run? (Interrogative)
அது ஓடியதா? (வினா)

**குறிப்பு:**
ran- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
run- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான விளக்கம்

1. இலங்கையைச் சுற்றிக் கடல் இருக்கின்றபொழுதிலும் உப்பு வரையறுக்கப்பட்ட சில இடங்களில் மாத்திரமே உற்பத்தி செய்யப்படுகின்றது.

உப்பு உற்பத்திக்காக உயர் சூரிய வெப்பக்காற்று, தட்டையான களிப்பாங்கான தரை, குறைவான மழைவீழ்ச்சி போன்ற காரணிகள் தேவை. மேற்படி சூழ்நிலைகள் இலங்கையில் சில பிரதேசங்களில் மாத்திரம் அமைந்துள்ளன.

2. பூமி தன் அச்சில் சுழன்றாலும் நாம் விழுந்துவிடாமல் இருக்கின்றோம்.

புவியின் மேலுள்ள புவியீர்ப்புச் சக்தியே எம்மை ஈர்த்து வைத்திருக்கின்றது. அதனால், புவி சுழன்றாலும் நாம் விழாதிருக்கின்றோம்.

3. இரவு நேரத்தில் கடல்நீர் சூடாக இருக்கும்.

பகல் வேளையில் சூரிய ஒளியால் கிடைக்கும் வெப்பம் கடல் நீரினால் அகத்துறிஞ்சப்படுகின்றது. இரவு வேளையில் இந்த வெப்பம் வெளிவிடப்படுகின்றது.

4. எமது இரு கண்களில் இருந்து ஒரு பார்வை உண்டாதல்.

கண்கள் இரண்டாக இருந்தாலும் பார்வை ஒன்றாக இருக்கின்றது. காரணம் இரண்டு கண்களும் ஒருமித்து இயங்குகின்றன. அத்துடன், ஒரு மையப்புள்ளியின்மீது இரண்டையும் குவியச் செலுத்துவதில் கண் தசைகள் ஒருங்கிணைந்து இயங்குகின்றன. இதனால், ஒரு பார்வை உருவாகின்றது.

எம்.ஆர்.எப்.ரக்ஸானா, கு/அல்-ஹுதா முஸ்லிம் ம.வித்.,ரிதீகம.




# ஆபத்தான சிலந்திகள்

அமெரிக்க நாடுகளில் வாழும் 'Black widow' என்னும் ஒருவகை சிலந்தி கடித்தால் மனிதனுக்கு மரணம்தான் ஏற்படும். பொதுவாக, சிலந்திகளுக்கு தாடையின் பக்கவாட்டில்தான் அசையும். ஆனால், Tarantula எனும் சிலந்திகளின் தாடைகள் மனிதர்களைப்போன்று மேலும் கீழும் அசையும் தன்மை உடையவை. இவ்வகை சிலந்திகள் 35 வருடங்கள் வரை உயிர் வாழ்கின்றன. Nursery web சிலந்திகள் தங்கள் குட்டிகளின் பாதுகாப்பிற்காக வலைகளைப் பின்னுகின்றன. இவை நீரின் மேல் ஓடும் அதிசய ஆற்றல் பெற்றவை. Spitting எனும் ஒருவகை சிலந்திகள் பிசின் போன்ற திரவத்தை சிறு பூச்சிகளின் மேல் உமிழ்ந்து அவற்றை செலிழக்கச் செய்த பின் உட்கொள்கின்றன. Crab எனும் சிலந்திகள் நண்டைப் போன்று பக்கவாட்டில் நகரக்கூடியவை. இவை பூக்களின்மீது அமர்ந்துகொண்டு அந்தப் பூவின் நிறத்திற்கு ஏற்ப, தன் உடலின் நிறத்தை மாற்றுகின்றன. பின் பூக்களை நாடிவரும் பூச்சிகளைப் பிடித்து உண்கின்றன.





ஏ.சீ.எஃப்.நஸ்ரியா,
கிரி/சுலைமானியா மு.வித்.,
குரீகொடுவ, பஹமுனே.

## நினைவில் கொள்வோம்

* சுதந்திர இலங்கையின் முதலாவது தேசபிதா
  - D.S. சேனாநாயக்க
* சுதந்திர இலங்கையின் முதலாவது ஜனாதிபதி
  - வில்லியம்கொபல்லாவ
* இலங்கையின் அரசாட்சி மன்றம்
  - நாடாளுமன்றம்
* இலங்கையில் ஆட்சிமுறை (அரசு)
  - சோசலிச ஜனநாயகக் குடியரசு
* இலவச கல்வியின் தந்தை
  - C.W.W. கன்னங்கர (1945)
* இலவச பாடநூல் விநியோகம்
  - 1980

எஃப்.காலிதா பேகம்,
கனேத்தன்னை மதீனா மு.ம.வித்.,
ஹிங்குளை,மாவனல்லை.

# யாருடைய மரம்?

அரசர் கிருஷ்ணதேவராயரின் அவைக்கு ஒரு நபர் வந்தார். அவர் அரசரிடம் "அரசே! என்னுடைய வயலும் பக்கத்து வீட்டுக்காரர் வயலும் அருகருகில் இருக்கின்றன. இரண்டுக்கும் இடையில் உள்ள வரப்பில், ஒரு



தென்னை மரம் உள்ளது. பக்கத்து வீட்டுக்காரர் அதை எனக்கு விற்று விட்டார். நான் அதை நன்றாகப் பராமரித்து வருகிறேன். இன்று அவர் என்னைத் தேங்காய் பறிக்கக்கூடாது என்கிறார். இப்போது அவர் தனது முடிவை மாற்றிக்கொண்டு விட்டாராம். மரம் திரும்பவும் அவருக்கு வேண்டுமாம்" என்று முறையிட்டார். அதைக்கேட்டு அவையினர் அனைவரும் திடுக்கிட்டனர்.

அப்போது அரசர் "என்ன செய்யலாம்?" என்று கேட்பதைப் போல் தெனாலிராமனைப் பார்த்தார். தெனாலிராமனும் நிலைமையை புரிந்துகொண்டு, "தாங்கள் அனுமதி தந்தால், இதற்கான தீர்வை நாளைக்குத் தள்ளி வைத்துக்கொள்ளலாம்" என்றார். அரசரும், "சரி" என்றார். தெனாலியும் அந்த நபரிடம், "நாளைக்கு உன் பக்கத்து வீட்டுக்காரரையும் இங்கு அழைத்து வா" என்று கூறி அவனை அனுப்பி விட்டார்.



மறுநாள் அந்த நபரும், பக்கத்து வீட்டுக்காரனும் சபைக்கு வந்தனர். இருவரிடமும் நன்கு விசாரித்த தெனாலிராமன், "அப்படியானால், நீ உன் மரத்தைத் திரும்ப எடுத்துக்கொள்ள விரும்புகிறாய் அல்லவா?" என்றார்.

அதற்கு அவன், "ஆம் ஐயா!" என்றான்.

"சரி நீ அவனுடைய பணத்தைத் திரும்பக் கொடுத்துவிடு..." என்றார் தெனாலிராமன். அவனும் பணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டான். சபையினருக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு தெனாலி, மரத்தை வாங்கியவரிடம், "சரி... இன்றிலிருந்து அந்த மரம் உன்னுடையது இல்லை" என்றார். தொடர்ந்து, "இன்னொரு விடயம்... அந்த மரம் நீ வாங்கும்போது உன்னுடையது. அதில் இனிமேல் காய்க்கும் காய்கள் எல்லாம் மரத்தைத் திரும்பக் கொடுத்தவரையே சேரும். அதை அவர் பறித்துக்கொள்ள அவ்வப்போது நீ அனுமதிக்க வேண்டும். தடுக்கக்கூடாது. நீயும் பறித்துக்கொள்ளக் கூடாது" என்றார். மரத்தை திரும்பப் பெற்றவன் முகத்தில் ஏமாற்றம். புகார் கொடுத்த நபர் மகிழ்ச்சியுடன் தெனாலிராமனை வணங்கிவிட்டு விடைபெற்று சென்றார்.

## நுளம்பு



தூசு போல பறக்குமே
தூக்கம் வராமல் தடுக்குமே!
ஊசி போட்டு எம்மையே
உடலை துவட்டி எடுக்குமே!

நோய்கள் பலவும் தொற்றியே
நொந்து வாட்டி வைக்குமே!
காய்ச்சல் கண்டு எம்மையே
கவலை கொள்ளச் செய்யுமே!

தேங்கி நிற்கும் நீரிலே
தோற்றம் பெற்று வளருமே!
தீங்கு இன்றி வாழவே
தினமும் சுத்தம் செய்வோமே!

குப்பை கூளம் எங்கிலும்
குழிகள் வெட்டிப் புதைப்போமே!
சமூகநலன் சார்ந்தே
எழில் நலமாய் வாழ்வோமே!

எம்.ஆர்.எப்.ரிஸ்லா, ஹிஸ்புல்லா ம.கல்., குருணாகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவின் முதலாவது நாகரிகத்தை உருவாக்கியோர் கிராமிய மக்களே!

ஐரோப்பாவில் முதலாவது முன்னேறிய நாகரிகத்தினை கட்டியெழுப்பிய மூதாதையர்கள் என்று கருதப்படும் 'மினோஆன்ஸ்' சந்ததியினரே, உண்மையான ஐரோப்பிய இனத்தவர் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இற்றைக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமைவாய்ந்த நாகரிகத்தினைக் கட்டியெழுப்ப உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த மனிதர்களே காரணமாக இருந்தனர் என்ற ஒரு கருத்தும் நிலவி வந்தது. இந்தக் கருத்து முற்றிலும் தவறானது என்றும் மினோ ஆன்ஸ் சந்ததியினரே, ஐரோப்பாவின் முதலாவது சந்ததியினர் என்றும் தற்போது நிருபணமாகியுள்ளதாக ஆய்வுக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர். இந்த மினே ஆன்ஸ் சந்ததியினர் எகிப்தில் இருந்து வந்தவர்கள் என்றே முதலில் கருதப்பட்டு வந்தது. எனினும், நான்காயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த மினோ ஆன்ஸ் சந்ததியினரின் எலும்புக் கூட்டுத்தொகுதியிலிருந்து பெறப்பட்ட மரபணு (DNA) மாதிரிகளை ஆய்வுக்குட்படுத்தியே இந்த ஆய்வுக் குழுவினர் மேற்படி தீர்மானத்திற்கு வந்துள்ளனர். இந்த மரபணுக்கள் ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் பண்டைய காலத்தில் வாழ்ந்த மற்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களின் மரபணு இயல்புகளுடன் ஒத்துப் போவதாகவும் கூறுகின்றனர்.

"அவர்கள் நியோலித்திக் கால (புதிய கற்கால) ஐரோப்பியர்கள் போன்று இருக்கின்றனர். அதேபோன்று தற்போது மத்திய தரைக்கடல் பகுதியை சேர்ந்த க்ரியெட் தீவில் வாழும் க்ரிஎட்ன்ஸ்ஷனரை போன்றும் அவர்கள் உள்ளனர்" என்று வொஷிங்டன் பல்கலைக்கழகத்தின் மனித மரபணுக்கள் பற்றிய விஞ்ஞானத்துறையின் பேராசிரியர் ஜோர்ஜ் ஸ்டெமடொயன்னோபோயுலஸ் குறிப்பிடுகின்றார்.

க்ரியெட்டில்தான் மினோஆன்ஸ் கலாசாரம் தோன்றியது. கி.மு. 2700 இற்கும் 1420 இற்கும் இடைப்பட்ட காலத்திலேயே இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்தப் பகுதி தற்போது கிரேக்க நாட்டிற்கு சொந்தமாக உள்ளது. சென்டோரினி தீவில் இருந்த தேரா என்ற எரிமலை வெடித்துச் சிதறியதனால், இந்த நாகரிகம் அழிந்துவிட்டதாக சிலர் கருதினர். எனினும், 'மைசீனியன்' படையெடுப்பினால் இந்த நாகரிகம் அழிவடைந்ததாகவும் சிலர் கூறுகின்றனர். க்ரியெட்டில் வசித்து வந்ததாகக் கருதப்படும் 'மினோட்ட உர்' எனப்படும் அரை மனித அரை எருது உருவம் கொண்ட விலங்கின் காரணமாக, இந்த மினோஆன்ஸ்கள் இன்று பிரபல்யம் அடைந்துள்ளனர். தற்போது எஞ்சியுள்ள க்னோஸ்ஸோசில் உள்ள மினோஆன்ஸ் அரண்மனை உள்ளிட்ட இதர கட்டடங்களை சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் பிரித்தானிய நாட்டைச் சேர்ந்த தொல்லியல் அறிஞரான சேர். ஆத்தர் வென்ஸ் என்பவர் கண்டுபிடித்திருந்தார்.


அத்துடன், மினோஆன்சின் ஓவியங்கள் எகிப்தின் பிரமிட் ஓவியங்களுடன் நெருங்கிய தொடர்பு நிலையை கொண்டிருந்தமையையும் அவர் அவதானித்துள்ளார். இதன்படி, இந்த மினோஆன்ஸ் நாகரிகத்தின் ஆரம்பம் எகிப்திலிருந்தும் லிபியாவிலிருந்தும் வந்திருக்கலாம் என்ற கருத்தினை அவர் முன்வைத்தார். அன்றுமுதல் இன்றுவரை இக்கருத்தே நிலவி வந்தது.

துருக்கியும் ஈராக்கும் அமைந்துள்ள பிரதேசம் 9000 ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவில் இருந்து பிரிந்திருந்தது. அவ்வாறாயின், மினோஆன்ஸ்கள் அனதோலியன் விவசாயிகளிடமிருந்து பிரிந்து வந்தவர்களாக இருக்கலாம் என்ற கருத்தும் நிலவியது.


"இந்த காலப்பகுதியானது, மத்திய தரைப்பகுதியில் மிகவும் எழுச்சி மிக்க காலப்பகுதியாக இருந்தது என்றும் எம்மால் கூறமுடியும். இதனால், மினோஆன்ஸ் சந்ததிகள் நிச்சயமாக அயலவர்களான ஆபிரிக்காவுடன் சிறந்த நட்புணர்வினைக் கொண்டவர்களாக இருந்துள்ளனர். இந்த அரண்மனையிலும், எகிப்திலும் உள்ள ஓவியங்களில் ஒன்றுக்கொன்று ஒத்த இயல்புகளை காணமுடிகின்றது. இதனூடாக, கலாசாரப் பரிமாற்றத்தினை நன்கு அவதானிக்க முடியும்" என்று பேராசிரியர் ஜோர்ஜ் ஸ்டெமடொயன்னோபோயுலஸ் கூறுகின்றார்.

இந்த கண்டுபிடிப்பின்படி, பண்டைய மினோ ஆன்ஸ்கள் பண்டைய அனடோலியாவில் நிலவி வந்த விவசாய சந்ததியில் இருந்து வந்தவர்களின் இயல்புகளை வெளிப்படுத்துவதாகக் கூறப்படுகின்றது.

இந்த காரணங்களின்படி, மினோஆன்ஸ் சந்ததியினர் அனடோலியாவில் இருந்து இடம்பெயர்ந்தவர்களா? என்பது குறித்து ஆராய மரபணுப் பரிசோதனைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவேண்டும் என்று இந்த ஆய்வுகளில் தொடர்புபடாத கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் இணைந்த மெக்டொனல்ட் தொல்லியல் நிறுவனத்தின் தொல்லியல் ஆய்வாளர் கொலின் ரென்ஃப்ரச் குறிப்பிடுகின்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கெழுத்துப் போட்டி இல. 38

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | |
| | | 3 | | | 4 |
| | | | | 5 | |
| | | 6 | | | 7 |
| | 8 | | | 9 | |
| | 10 | | | | |

### மேலிருந்து கீழ்

01. செயலில்/தோற்றத்தில் வெளிப்படும் சிறப்பான தன்மையைக் குறிக்கும்.
02. முருகனின் மனைவி.
04. 'கூனன்' என்பதன் எதிர்ப்பாற்சொல். (தலைகீழ்)
05. போற்றத்தக்க தன்மை என்பதைக் குறிக்கும்.
06. நீரைத் தேக்குவதற்காக நதிக்குக் குறுக்கே கட்டப்படுவது.
07. யானை.
10. (தாவரங்களின்) செழிப்பு என்பதைக் குறிக்கும். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஒருவர்.
02. மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி.
03. தானிய வகையொன்று.
05. சமையலுக்குப் பயன்படுவது. (மாறியுள்ளது)
06. 'சாந்தம்' என்றும் பொருள்படும். (மாறியுள்ளது)
07. பழம். (மாறியுள்ளது)
08. உடல் அரிப்பை ஏற்படுத்தக்கூடியது.
09. நில்.
10. ஒட்டுவதற்கு உதவும். (மாறியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 37 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மா | ளி | கை | | 2 சீ | ரி |
| தொ | | 3 சை | வ | ம் | |
| ரு | 4 த | | | 5 ம | து |
| 6 பா | லை | 7 வ | ன | ம் | |
| க | | ம் | | | 8 ப |
| ன் | த | 9 பு | | 10 ப | னி |

### அற்லஸ் அறிவுக்கு விருந்து - 419 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
*வீ.மாதுரி, தம்பிலுவில்-01.*

**போட்டி: 02**
*எம்.சன்பர், வறகாப்பொளை.*

**போட்டி: 03**
*ருகையா ஹசன், கொழும்பு-06.*

**போட்டி: 04**
*சி.விஷ்ணு, நிலாவெளி.*

**போட்டி: 05**
*ஞா.சஜீவனி, திவுரும்பிட்டிய.*

**பாராட்டுப் பெறுவோர்:**

- சு.அபிநயா, அப்புத்தளை.
- முனாஸிர் ஹக், கொடவத்த.
- ஐ.ஷாலிகா, மன்னார்.
- கே.தானியா, மாத்தளை.
- எம்.இன்பாஸ், பொல்கஹவளை.
- எம்.அனீஸ், உடுவெல்ல.
- ஏ.என்ட்ரூ, கொட்டாஞ்சேனை.
- ரஸீன் பயாஸ், சாய்ந்தமருது-01.
- ரயீஸா அன்வர், மல்வானை.
- உ.பிதுர்சன், பாண்டிருப்பு-02A.

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக 1




## 5

இங்குள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி குறைந்தது 10 சொற்களை யேனும் அமைக்க

மா
ரி
டை லை
ச ம
ணி வி ன்

## எத்தனை உள்ளன? 2






**தயாரிப்பு - ஸாரா**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.06.26 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.


அற்லஸ் அறிவுக்கு விருந்து 422
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## எதிர்ப்பதம் தருக 4

(உயர்வு/புண்ணியம்/அடி/குன்று/அடிமை/நிறை)

1. நுனி - ..............................
2. குறை - ..............................
3. தாழ்வு - ..............................
4. ஆண்டான் - ..............................
5. பாவம் - ..............................
6. குழி - ..............................

## இடைவெளிகளை நிரப்புக 3




## அறிவுக்கு விருந்து - 419 விடைகள்

**போட்டி: 01**

சிங்கப்பூர்

**போட்டி: 02**

1. குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்.
2. எலும்பு கடிக்கிற நாய் இரும்பைக் கடிக்குமா?
3. நா அசைய நாடு அசையும்.

**போட்டி: 03**



**போட்டி: 04**



**போட்டி: 05**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கரைப்பற்று பனங்காட்டைச் சேர்ந்த நந்தகோபன்-மோட்சவதி தம்பதியரின் செல்வப் புதல்வி ஜயபிரதா, தனது ஐந்தாவது பிறந்தநாளை 21.06.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் பாசுபதேசுவரர் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: கே.கே.லோகநாதன்)*



வெள்ளம்பிடியைச் சேர்ந்த முர்ஸித்-ரஹ்மதுன்னிஷா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மட் முபஸ்ஸிர், தனது பதினாறாவது பிறந்தநாளை 21.06.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: இல்மா முஜா)*



புசல்லாவ அகலகொடுவையைச் சேர்ந்த சலீம்-சியாமா தம்பதியரின் செல்வப் புதல்வி சல்மா, 21.06.2013 அன்று தனது பத்தாவது பிறந்தநாளை கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.



களுத்துறை மபூர் கிரஸண்டைச் சேர்ந்த என்.காதர்-பாத்திமா சபீகா தம்பதியரின் அன்பு மகள் பாத்திமா ஷாகிரா, தனது ஏழாவது பிறந்தநாளை 14.06.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



மாவனல்லை கிருங்கதெனியவைச் சேர்ந்த தமீம்-பரீனா தம்பதியரின் செல்வப் புதல்வன் பர்வேஸ் முஹம்மட், தனது பதினொராவது பிறந்தநாளை 09.06.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



ஆரையம்பதி கிராமக்கோட் வீதியைச் சேர்ந்த கிருஷ்ண பிள்ளை-பத்மினி தம்பதியரின் செல்வப் புதல்வி சதுர்ஷா, தனது நான்காவது பிறந்தநாளை 17.06.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் ஸ்ரீ சிவனேஸ்வரர் அருள்பெற்று சகல கலைகளும் கற்று ஆரோக்கியமாக வாழ வாழ்த்துகின்றனர்.



அநுராதபுரம்-நாச்சியா தீவைச் சேர்ந்த இர்ஷாத்-மர்ஜீனா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மட் சப்ராஸ், தனது பதினாறாவது பிறந்தநாளை 17.06.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: இர்ஷாத்)*



நிந்தவூர் 22 ஐச் சேர்ந்த பைத்துல்லாஹ் அமான்-சித்தி ஆயிஷா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மட் அஸ்லாஃப், தனது மூன்றாவது பிறந்தநாளை 17.06.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.






மட்டக்களப்பு கல்லியன் காட்டைச் சேர்ந்த கிருஷ்ண மூர்த்தி சரிஸ்கா, அம்பாறையில் நடைபெற்ற தேசத்தின் மகுடம் 2013 கண்காட்சியில் மாணவர்களுக்கான சித்திரம் வரைதல் போட்டியில் பங்குபற்றி சான்றிதழைப் பெற்றுள்ளார். இவர், இரண்டாவது நிரையில் போட்டியில் பங்குபற்றியதையும் போட்டியில் பங்குபற்றிய மற்றுமொரு மாணவியையும் படத்தில் காணலாம்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.நுஹா,
அல்-முபாரக் தேசிய பாட., மல்வானை.



த.பிரியன்,
சௌமியபுரம், இறங்களை.



சு.மதுஷன்,
நு/நம்மாதா பாட., நுவரெலியா.



ம.கேசிகன்,
பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்.,
யாழ்ப்பாணம்.



இன்ஸாப்,
அல்-ஹம்ரா ம.வித்., தர்கா நகர்.

# உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...

க்ளோட் மோனே (Claude Monet), பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஓவியராவார். இவர், 1840 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி பிரான்ஸின் பெரிஸ் நகரில் பிறந்தார். ஓவியத்தில் 'உணர்வுப் பதிவுவாதம்' (impressionism) எனும் அணுகுமுறையை இவர் அறிமுகப்படுத்தினார். இவர் வரைந்த 'உணர்வுப்பதிவு, சூரியோதயம்' (Impression, Sunrise) என்னும் ஓவியமே அதற்கு வழிவகுத்தது.



க்ளோட் மோனே
(1840-1926)

இவர், சிறுவயதிலிருந்தே ஓவியத்துறையில் அதிக ஈடுபாடு காட்டினார். ஆரம்பகாலத்தில் கேலிச் சித்திர ஓவியராகவே உள்ளூர் மக்களுக்கு இவர் அறிமுகமானார்.




அப்போது, இயூஜீன் பௌடின் (Eugene Boudin) என்னும் ஓவியருடன் இவருக்கு அறிமுகம் ஏற்பட்டது. அவரிடமிருந்து எண்ணெய் ஓவியங்களை வரைவதற்குப் பயிற்சிகளை பெற்றுக்கொண்டதுடன், வெளிப்புற ஓவிய நுட்பங்களையும் மோனே கற்றுக்கொண்டார். 1862 இல் சார்ல்ஸ் கிளேயர் என்பவரின் ஓவியக்கூடத்தில் சேர்ந்தார். அங்கு இவருக்கு மேலும் பல ஓவியர்களின் அறிமுகம் கிடைத்தது.




அவர்களுடன் இணைந்து ஓவியம் வரைவதில் புதிய அணுகுமுறைகளை கடைப்பிடித்து வந்தார். இதுவே, பின்னர் ஓவியத்தில் 'உணர்வுப்பதிவுவாதம்' என அறியப்படலாயிற்று.

பச்சை ஆடை உடுத்திய பெண், நீர் அல்லிகள், On the Bank of the Seine, Mouth of the Seine, Train in the Snow போன்ற ஓவியங்கள் உட்பட, மேலும் பல பிரசித்திபெற்ற ஓவியங்களையும் மோனே வரைந்துள்ளார். இவர், 1926 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி தனது 86 ஆவது வயதில் பிரான்ஸின் கிவ்மி எனும் இடத்தில் உயிர் நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஜோன்ஸ்டனின் ஆலோசனை

சேர். அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் அவர்களின் யோசனைகள் அடங்கிய அறிக்கையில், குளங்கள், அணைக்கட்டுகள், நீர்நிலைகள், கால்வாய்கள், நீரோடைகள், நீர்ப்பாசனத்துக்குரிய நீர்நிலைகள் அனைத்தையும் சீர்திருத்தி நாட்டை விவசாயத்தில் உயர்ந்த நிலைக்கு கொண்டுவருவது அவரது முக்கிய ஆலோசனையாக இருந்தது. அதனை ஆளுனர் ஏற்றுக்கொண்டார். எனினும், அவற்றை புனருத்தாரணம் செய்ய அவருக்கு பெருந்தொகையான பணம் தேவைப்பட்டது. அதற்கும் ஜோன்ஸ்டன் அவர்கள் ஒரு திட்டத்தை முன்வைத்தார். அதாவது ஐரோப்பியர்களும் இந்தியர்களும் தமது பணபலத்தைப் பயன்படுத்தி அதனைச் செய்வதற்குரிய அதிகாரத்தை வழங்குவதே அவரது திட்டமாகும். அதுபோலவே விவசாயமும் வர்த்தகமும் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களை தளர்த்தவேண்டும் என்றும் அவர் சில யோசனைகளை முன்வைத்தார். தாவர மாதிரிப் பூங்கா ஒன்றை அமைக்கவும் விவசாய உபகரணங்களைக் கொண்ட கண்காட்சி ஒன்றை நடத்தவும் யோசனை வழங்கினார். அத்துடன், பொதுக்கல்வி, ஓவியக்கலை, தொழில்நுட்பக்கல்வி ஆகிய முத்துறைக்கான பயிற்சிகளை மேற்கொள்ளவும் பாடசாலைகளை உருவாக்கவும் ஆலோசனை வழங்கப்பட்டது.

மேலும், அரசியலமைப்பு சீர்திருத்தம் குறித்து ஜோன்ஸ்டன் அவர்கள் முன்வைத்த யோசனை மிகவும் பயன்மிகுந்ததாக இருந்தது.

இந்நாட்டு மக்களின் சமயம் மற்றும் பண்பாடு, பழக்கவழக்கங்களின்படி, சட்டசபை ஒன்றை அமைக்கவும் உறுதிப் பத்திரத்துடன் வேலைவாய்ப்புகளை வழங்கவும் ஆலோசனை வழங்கினார். அத்தோடு, சிவில் அதிகார முறையை நீக்கி சகல பதவிகளுக்கும் கற்றுத் தேர்ந்த சுதேசிகளை நியமிப்பது சிறந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறியதாக இருந்தாலும் ஆபத்து மிக்கது...



கடந்த சில வாரங்களாக ஹரிணியின் கைக்கடிகாரம் இயங்கவில்லை. பாடசாலை முடிந்து வீடு திரும்பும் வழியில் தனது நண்பி குமாரியுடன் சென்று கைக்கடிகாரத்திற்கு புதிய பற்றரி ஒன்றை ஹரிணி பொருத்திக் கொண்டாள். இதன்போது இவர்கள் இருவருக்கும் இடையில் நிகழ்ந்த சம்பாஷணையில் முக்கியமான சில விடயங்களை இங்கு அவதானிப்போம்.




"குமாரி, பார்த்தாயா? எனது கைக்கடிகாரத்திற்குப் பொருத்தப்பட்ட சிறிய பற்றரியினை?"

"ஆமாம். இன்றுதான் நான் அப்படியொரு பற்றரியினைப் பார்த்தேன்"

"உனக்குத் தெரியுமா, நாம் பயன்படுத்தும் பலவிதமான உபகரணங்களில் இந்த பற்றரியும் ஒன்று. இவை மிகவும் நச்சுத் தன்மை வாய்ந்தவை. இந்த பற்றரி விழுங்கப்பட்டால் உயிர் ஆபத்தினையும் ஏற்படுத்தி விடும்"

"ஆ.... உண்மையாகவா? எங்களது வீடுகளிலும் இந்த பற்றரிகள் இருக்குமா?"

"ஆம் இருக்கலாம். இங்கு பார் இந்த துண்டுப் பிரசுரத்தினை வாசித்துத்தான் நான் இந்த விடயங்களை அறிந்துகொண்டேன்" இனி இதனை அடியொட்டி இத்தகைய பற்றரிகள் பற்றிய விபரங்களைத் தெரிந்துகொள்வோம்.

## பொத்தான் பற்றரியில் இயங்கும் பொருட்கள்

வீட்டில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில் இந்த சிறிய பற்றரியினைக் காண முடியும். அவையாவன;

- கைக்கடிகாரம்
- டிஜிட்டல் விளையாட்டுப் பொருட்கள்
- செவிப்புலன் சார்ந்த உபகரணங்கள்
- கல்கியூலேட்டர்
- பலதரப்பட்ட வாழ்த்து அட்டைகள்



## பொத்தான் பற்றரிகளில் உள்ளடங்கியுள்ளவை




## பயன்பாட்டின் பின்னர்....

வீடுகளில் உள்ள இவ்வாறான பொருட்கள் சிலகால பயன்பாட்டின் பின்னர் செயல் இழந்துவிடுகின்றன. இவற்றை உரியமுறையில் அப்புறப்படுத்திவிடுவதே பாதுகாப்பான முறையாக உள்ளது. ஆனால், பெரும்பாலானவர்கள் உரிய முறையில் இவற்றை அப்புறப்படுத்துவதில்லை. அவை கவனம் இன்றி சுற்றுப்புறத்தில் விடப்படுகின்றன. சில வேளைகளில் வீட்டின் எங்காவது ஒரு மூலையில் இவற்றின் ஆபத்தினை உணராது வீணே சேர்த்து வைக்கப்படுகின்றன. இது ஓர் ஆபத்தான நிலைமை என்றே கூறவேண்டும்.





## உரிய வழிமுறைகளைப் பின்பற்றி அப்புறப்படுத்துங்கள்

பாவனையின் பின்னர் சிறிய பற்றரிகள் அடங்கிய இலத்திரனியல் பொருட்களை, பாவனைக்கு உதவாத இலத்திரனியல் பொருட்களை சேகரிக்கும் மத்திய நிலையங்களில் ஒப்படைத்து விடுங்கள். இதனால், வீட்டில் ஒதுக்கப்பட்ட பொருட்கள் வீணே சேராது வீட்டின் சூழலும் பாதுகாக்கப்படும்.

## பற்றரி உட்கொள்ளப்பட்டால்...

சிறு பிள்ளைகள் தமது அறியாமை காரணமாக, பொத்தான் பற்றரிகளை விழுங்கிவிடலாம். இவ்வாறான பற்றரிகளை விழுங்கியிருப்பின், சில உடல் உபாதை அறிகுறிகள் தென்படக்கூடும். காய்ச்சல், வயிற்று வலி, வாந்தி என்பனவே அந்த அறிகுறிகளாகும்.

## உணவுக் குழாயில் அடைபட்டிருப்பின்...

இவ்வாறான பற்றரி உணவுக் குழாயில் அடைபட்டிருந்தால், மோசமான நச்சுக் காரணமாக ஆபத்து ஏற்படும். உரிய மருத்துவ சிகிச்சைகளைப் பெறாதவிடத்து உயிரிழப்பு ஏற்படலாம்.



அல்லாதுவிடின், உடல் நஞ்சாகி மரணம் சம்பவிக்கலாம்.

## எடுக்கவேண்டிய உடனடி நடவடிக்கைகள்

பற்றரி ஒன்று விழுங்கப்பட்டால், துரிதகதியில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சில உள்ளன.

- வாந்தி எடுத்தலைத் தவிர்த்தல்
- உணவு, பானம் உட்கொள்வதைத் தவிர்த்தல்
- துரிதகதியில் மருத்துவ ஆலோசனையைப் பெறுதல்

மருத்துவரை அணுகுவதற்கு முன்பு உரிய முதலுதவிகள் அளிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.




## நினைவில் கொள்க

எச்சந்தர்ப்பத்திலாவது பொத்தான் பற்றரி விழுங்கப்பட்டால், அது உடலில் நச்சுத்தன்மையை ஏற்படுத்திவிடும். உங்கள் வீடுகளிலும் இவ்வாறான பொத்தான் பற்றரிகள் இருக்கக்கூடும். அவ்வாறான பற்றரிகளைக்கொண்ட பொருட்களை அல்லது பற்றரிகளை உரிய முறையில் உடனடியாக அப்புறப்படுத்திவிட வேண்டும். எதிர்பாராத முறையில் பொத்தான் பற்றரி விழுங்கப்படின், அதற்கு வழங்கப்படவேண்டிய முதலுதவிகள் பற்றி அறிந்துகொள்வது அவசியமாகும். அதன்பின் துரிதகதியில் மருத்துவ சிகிச்சையினை நாடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## பெலொமார் முடிச்சு


சாரணர்கள் மூகாம் அமைக்கச் செல்கையில், பயன்மிக்க முடிச்சுக்களைப் பற்றி தெரிந்திருக்க வேண்டியது அவசியம். இதில் குறிப்பாக 'பெலொமார்' முடிச்சு மிகவும் அத்தியாவசியமானதாகும். பெலொமார் முடிச்சினைப் போடுவதற்கு தடியினால் உருவாக்கப்பட்ட கொக்கி அல்லது தூண்டிலில் மீன்பிடிப்பதற்கெனப் பொருத்தப்படும் கொக்கியொன்றை கழன்றுவிடாதவாறு கயிற்றில் இறுக்கமாகக் கட்டுவதற்கு இந்த பெலொமார் முடிச்சு பயன்படுகின்றது. கடல் சாரணர்கள் உட்பட, ஏனைய சாரணர்களும் கற்றுக்கொள்ளவேண்டிய பெலொமார் முடிச்சு எவ்வாறு போடுவது என்பதை இங்குள்ள படத்தை அவதானிப்பதன்மூலம் கற்றுக்கொள்ளலாம்.

## பாலமொன்று அமைப்போம்

சாரணர்கள் தமது வெளிக்கள நடவடிக்கைகளின்போது மூகாம் அமைக்கையில், அதனை இலகுபடுத்திக் கொள்வதற்கு பாலமும் அமைப்பதுண்டு. மிகவும் எளிதானவை தொடக்கம் பாரிய அளவிலான பாலங்கள் இவ்வாறு அமைக்கப்படுவதுண்டு.







கயிறு, பலகை, தூண், தடிகள் மற்றும் பலம்மிக்க மரக்குற்றிகள் ஆகியன இதற்கு தேவையான பிரதான பொருட்களாகும்


### பாலமொன்றை அமைத்தல்


ஒரு கரையிலிருந்து மறு கரைக்குச் செல்வதற்காகவே பாலம் அமைப்பதுண்டு. எனவே, அதற்கென இக்கரையிலிருந்து அக்கரையை தொடர்புபடுத்தும் வகையில் இணைப்புக்களை மேற்கொள்ள வேண்டும். அத்துடன், பாலத்தை அமைப்பதற்கு மிகவும் பலம்மிக்க மரப்பலகைகளையும் உபயோகிக்க வேண்டும். நீளம் கூடிய பாலமொன்றை அமைப்பதற்கு பலநாட்கள் செல்லக்கூடும். அதில் நீளமான சிறிய மரக் குற்றிகளில் குறுக்காக கட்டப்படுகின்ற மரப்பலகைகளை கட்டுவதற்கு உறுதியான செப்புக் கம்பியும் கயிறும் பயன்படுத்தப்படுகின்றது. தேவையான இடங்களில் இரும்பு ஆணிகளையும் உபயோகிக்க முடியும்.

உங்களுடைய பாடசாலையில் கண்காட்சிகள் ஏதேனும் நடைபெறுகின்றதாயின், பிரதான பாதையின் குறுக்காக, இத்தகைய பாலத்தை அமைப்பதன்மூலம் கண்காட்சியை பார்வையிட வருகின்றவர்கள் இந்த பாலத்தில் பயணம் செய்து கண்காட்சிக்கூடத்தை சென்றடைவதனைப் போன்ற அமைப்பை உருவாக்கலாம். இது கண்காட்சியை பார்வையிட வருகின்றவர்களுக்கு புதுமையான ஓர் அனுபவமாகவும் அமையும்.

### குறுகிய கால பாலம்

குறுகிய கால பாவனைக்கென அமைக்கப்படுகின்ற பாலங்களும் உள்ளன. இவை ஆங்கில எழுத்தான 'A' வடிவில் பலம்மிக்க தூண்களை எழுப்பி அவற்றின் நாட்புறமும் அதனை தாங்கிக்கொள்ளக்கூடிய வகையிலான கம்பிகளையும் இணைப்பாகப் பொருத்தி அவற்றின் குறுக்காக மேற்படி பாலம் அமைக்கப்படுகின்றது. குறுகிய கால பாவனைக்கென இவை அமைக்கப்படுவதனால், குறுக்காக மரப்பலகைகளை பொருத்துவதைவிட, சிறிய மர உருளைக் குற்றிகளைப் பொருத்தமுடியும். இதனால், அதிக விரயத்தை மேற்கொள்ளாத பாலமாகவும் இது அமையும். (வரைபடங்களைக் காண்க)





## விஜய் சாரணர் உலகம்

# சிறுவர் உலகில் டின் டின் சாரணன்



ஜோப்பர்ஸ் ப்ரஸ்பர் ரேமி அல்லது 'ஹேர்ஜ்' (Herge) என்பவர் சிறந்த எழுத்தாளராவார். 1926 ஆம் ஆண்டு தொடக்கம் 1929 ஆம் ஆண்டு வரையில் சாரணர்களுக்கென பிரசுரமான 'Le Boy-Scout' சஞ்சிகைக்கு சிறந்த கார்ட்டூன் சித்திரக் கதையொன்றைப் படைத்த 'ஹேர்ஜ்' அவர்கள் அதற்கு 'தி எட்வென்ட்ச்சர் ஒஃப் டோட்ட' என்று பெயரிட்டிருந்தார். இந்த 'டோட்ட' கதாபாத்திரம் பருமனான சிறுவனாகவே சித்திரத்தில் சித்தரிக்கப்பட்டான்.


பல்வேறு வினோத திறமைகளைக் கொண்ட பாத்திரமாக இருந்த 'டோட்ட' நாளடைவில் குழந்தைப் பருவத்தைத் தாண்டிய பாத்திரமாக மூப்படைகையில் 'டின் டின்' பாத்திரமாக மாற்றமடைந்து உலகப் புகழ் பெற்றது.

ஆரம்ப காலங்களில் 'பெல்ஜியம்' மற்றும் அதனை அண்டிய நாடுகளில் 'டின் டின்' கதாபாத்திரம் புகழ் பெற்றிருந்த அதேவேளை, இன்று உலகம் பூராகவும் சிறுவர்களின் மனம் வென்ற கதாப்பாத்திரமாக 'டின் டின்' அமைந்துள்ளது. சிறு பராயத்தில் தான் ஒரு சாரணனாக இருந்தமையின் காரணமாகவே, 'டின் டின்' கதாபாத்திரத்தினூடாக அநியாயங்களைத் தடுக்கும் இத்தகைய கார்ட்டூன் தொடரைப் படைக்க முடிந்ததாக 'ஹேர்ஜ்' தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஜூன் மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday June 19, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org